நாட்டியம்

ஆசிரியர்: ரஞ்சன் ★ NATYAM ஏப்ரல் 1949 அணா 4

'வீட்டைக் கட்டிப் பார்'

என்ற பழமொழி

இனி உங்களைப் பயமுறுத்த வேண்டாம்

விருப்பப்படி ஆலோசனைக்கு

எங்கள ... துங்கள்.

PLANS ESTIMATES

Furnished on Request

S. SUBRAMANIAM & Co.

R. C. C. SPECIALISTS

Engineers & Contractors.

MADRAS.

வருகிறது!

பக்ஷிராஜாவின்

பவளக்கொடி

மஹாலிங்கம்... ராஜகுமாரி... வரதன்... ஸரோஜினி
கிருஷ்ணன்... மதுரம்... லலிதா... பத்மினி நடித்தது..

Directed by SRIRAMULU NAIDU

NARAYANAN Co Release..

RECEIVED
31 MAR. 194

விளம்பரத்தை "நாட்டியத்தில்" கண்டதாகத் தெரிவியுங்கள்.

சட்டம் ஒரு இருட்டறை...
அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு..
ஆனல் அது ஏழைக்கு எட்டாத விளக்கு!

பல உயர்ந்த தத்துவங்கள் நிறைந்த
உன்னத சமூகப் படம்....

ஜூபிடரின்

வேலைக்காரி

திவ்யமான நடிப்புக் கலையில்
திறமை மிகுந்து விளங்கும்
கே. ஆர். ராமஸ்வாமி
டி. எஸ். பாலையா நடித்தது

முக்கியமாகத்
தமிழ் நாடெங்கும்
நடைபெறுகிறது.

★

விளம்பரத்தை "நாட்டியத்தில்" கண்டதாகத் தெரிவியுங்கள்,

நாட்டியம்

பொருளடக்கம்

சர்வதாரி௵ பங்குனி௴ - ஏப்ரல் 1949

சதங்கை 1 ● ● மணி 4

	பக்கம்
● இம் மணியின் முன் அணி ● உங்களுக்குத் தெரியுமா ?	140
● அபிநய தர்ப்பணம் நந்திகேச்வரர்	141
● பொற் கனவு (சிறுகதை) வேம்பு	144
● நாட்டியப் பயிற்சி 'ரஞ்சன்'	148
● நாட்டியக் குதிரை 'நடோத்தமன்'	151
● முத்து ஸ்வாமி தீக்ஷிதர் க்ருதி 'செம்மங்குடி'	153
● கலைத் துணுக்கு	156
● தஞ்சை கிருஷ்ண பாகவதர் துரையப்ப பாகவதர்	158
● நாட்டிய சாஸ்திரம் வாஸுதேவ சாஸ்திரி	160
● கண்ணனும் கலையும் 'சிராகி'	162
● கேரள நடனம் கோபிநாத்	165

குறிப்பு :—மணியில் வெளியாகும் கட்டுரை, கதை முதலியன பிரசுர உரிமை பெற்றவை. இதிலிருந்து எடுத்துப் பிரசுரிக்க விரும்புவோர் எழுத்து மூலம் முன்பாகவே அனுமதி பெற்றுக்கொள்வது அவசியம்.

★ இம் மணியில்

'பரத முனிவரை' அறியாத கலைஞர் இருக்க முடியாது. இன்று நாட்யடித்தைப் பற்றிய பல நூல்கள் காணப் பட்டாலும் 'பரத சாஸ்திரத்தின்' வழி நூல்களாகவே அவைகள் அமைந்துள்ளன. பரதரைப் புரிந்து கொண்டால் கலைத் தருவின் வேரிலே நீர் ஊற்றியது போல வாகும். எனவே அதற்கு வேண்டியபடி முயன்று **நாட்டிய சாஸ்திரத்தின்** அத்தியாயங்களை ஒருவாறு புரட்டிக் காண்பிக்கிறார் **வாஸுதேவ சாஸ்திரி**.

அன்பர்கள் தூண்டியதற்கு ஏற்ப வடமொழியில் உள்ள நாட்டிய நூல்களுள் எளிதாகவும், ஓரளவு தெளிவாகவும் அமைந்துள்ள **நந்திகேச்வரரின் அபிநய தர்ப்பணம்** என்ற நூலும் தக்க குறிப்புகளுடன் தமிழில் ஆரம்பமாகின்றது.

கதா கால க்ஷேபத்தில் தனக்கு நிகரில்லாதவராக விளங்கிய காலஞ் சென்ற **கிருஷ்ண பாகவதரைத்** தன் சொல் ஓவியத்திலே கொணர்ந்து நிறுத்துகிறார் **துரையப்ப பாகவதர்**.

உளங் குளிர, உலகு குளிர, மழை பொழிய வேண்டி **தீக்ஷிதரவர்கள்** அன்று அமைத்துத் தந்த க்ருதி யொன்றை, இன்று நம் செவி குளிர ஸ்வரப்படுத்தி யுள்ளார் **செம்மங்குடி**.

புதிய சொல் கட்டுடன் எடுப்பாக **நாட்டியத்தின்** ஏழாவது **பயிற்சி** வெளியாகின்றது.

நாடோத்தமன் நாட்டியக் குதிரையைக் கொணர்ந்து நிறுத்தி, அதன் வரலாற்றையும் ஆதியோடு அந்தமாகக் கூறி விடுகிறார்.

தன் பெயருக்கு நேர்மாறாகச் சுவை மிகுந்த பாணியில் **பொற்கனவு** ஒன்றைச் சிறுகதையிலே பொறித்து, கலை பற்றிய நம் கனவை நனவாக்க முயல்கிறார் **வேம்பு**.

'சுவையே கண்ணன், கண்ணனே சுவை' என்பதைக் **கண்ணனும் கலையும்** என்பதில் காட்டுகிறார் **சிராகி**.

கோபிநாத் அவர்களின் **கேரள நடனத்தில்** ஹஸ்த லக்ஷணங்கள் மேலும் தொடர்ந்து வெளியாகியுள்ளன.

கலைத் துணுக்குகளும், உங்களுக்குத் தெரியுமாவும், எப்பொழுதும் போல் தொடர்கின்றன.

சைத்திரிகர் **ஸ்ரீ சுபா** அவர்களுடைய சித்திரங்களும் மணியில் ஆங்காங்கு ஒளி விடுகின்றன.

★ இம் மணியின் முன்னணி



மணியின் முகவணியாக அமைந்திருக்கும் சிற்பமும் இசை உலகின் மும்மணிகளுள் ஒருவருடையது. ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் பரம பாவுகர். உண்மைக் கலைஞனாக வாழ்ந்தவர். வழிகாட்டி. தன்னுடைய இனிய-எளிய-ஆழமான பொருள் நிறைந்த, அனுபவத்தை அடிப்படையாகக்கொண்ட கீர்த்தனைகளாலே, தானுண்ட ராமனும் அமுதத்தை உலகமும் உண்ண அள்ளிக் கொடுத்த வள்ளல்.

இம் மஹானுடைய சரித்திரத்தை முழுமையுடன் வெளியிட விரும்பி, சென்ற மணியில் வெளியிட்டிருந்த வேண்டுகோளுக்கு அன்பர்கள் பலர் ஆதரவு தந்துள்ளது கண்டு மகிழ்கிறோம்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் வாழ்க்கையை ஒட்டிக் கர்ண பரம்பரையாகக் கேட்ட வரலாற்றையும் எழுதலாம். அதையும் வரவேற்கிறோம். 'எழுத்தில் இல்லை' என்ற காரணத்தால் அறிந்துகொள்ள வேண்டிய எவ்வளவோ விஷயங்கள் மறைந்து போகின்றன. அன்பர்களின் தீவிர முயற்சி ஸ்ரீ ஸ்வாமிகளின் சரித்திரத்தைக் கூடிய அளவு தெளிவாக வெளியிடத் துணை புரியுமென்று நம்புகிறோம்.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நம் சிற்பி ஸ்ரீ மணிவண்ணனும் அவருடைய சகோதரர் ஸ்ரீ ஜயராமனும் ஸ்ரீ த்யாகராஜரின் சிற்பமொன்றை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

ஸ்ரீ மாயவரம் ராமகிருஷ்ணன் அவர்கள் சிற்பத்தைப் புகைப் படமாக ஆக்கித் தந்து, சித்திரக்காரர் ஸ்ரீ ஜகதீசன் அவர்கள், தானும் பங்கு கொண்டு அழகிற்கு அழகு செய்யும்படி வழி செய்திருக்கிறார். ●

உங்களுக்குத் தெரியுமா?

1. ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் அன்னையும் தந்தையும் யாவர்?
2. தற்காலத்தில் 'கச்சேரி' என வழக்கிலிருக்கும் வார்த்தை எம் மொழியைச் சேர்ந்தது? எப்பொழுது வழக்கத்திற்கு வந்தது?
3. பஞ்ச ரத்தினக் கீர்த்தனைகள், எந்தெந்த ராகங்களில் அமைந்துள்ளன? இவைகளை அமைத்தது யார்? இவைகளுக் குள்ள வேறு பெயர் என்ன?
4. "உமாதாஸ" "குமார" என்பன யார் யாருடைய முத்திரைகள்?
5. 'பஞ்ச நத க்ஷேத்திரம்' எது? இசை உலகில் அதற்குள்ள பெருமை என்ன?
6. ராம நாடகக் கீர்த்தனைகளை இயற்றியவர் யார்? அவர் காலம் என்ன?
7. 'அபங்கங்கள்' என்பன யாவை?
8. ஸப்த ஸ்வரங்களும் தமிழ் மொழியில் எவ்வாறு வழங்கும்?
9. 'கெத்து' என்பது யாது? அதன் உபயோகம் என்ன?
10. தாளம் எத்தனை வகைப்படும்?
11. படத்திலுள்ளது என்ன?

(விடைகளை 152-வது பக்கம் பார்க்கவும்)

அபிநய தர்ப்பணம்

நந்திகேச்வரர்

கடவுள் வணக்கம்

ஆங்கிகம் புவனம் யஸ்ய
3 4
வாசிகம் ஸர்வ வாங்மயம் ||

ஆஹார்யம் சந்த்ர தாராதி
3 3
தம் நும: ஸாத்விகம் சிவம் || 1 ||

●●● இதன் பொருள் :— வையகத்தையே 'ஆங்கிக'மாக்வும், மொழியனைத்தையும் 'வாசிக'மாகவும், நிலவு நட்சத்திரம் முதலான வற்றை 'ஆஹார்ய' மாகவும் கொண்டுள்ள 'ஸத்வ குணம்' நிறைந்த சிவபெருமானை வணங்குகின்றோம்.

●● விளக்கம் சிவபெருமான் தானே ஒரு நடனாக இருக்கிறார். 'நடராஜன்' என்றே அவரை அழைக்கிறோம். அவர் தான் ஆடி உலகை ஆட்டுகிறார்.

நடனத்திற்கு வேண்டிய அம்சங்கள் நான்கு : ஆங்கிகம், வாசிகம், ஆஹார்யம், ஸாத்விகம் என அவை வழங்கும்.

சிவ பெருமான் தான் நடனாக இருக்கும் பொழுது முற்கூறிய நான்கு அம்சங்களோடு கலந்து காணப்படுகிறார். உலகமே விராட் புருஷனாகிய அவருடைய உடலாக அமைந்துள்ளது. சப்த - ப்ரம்ம மாக இருக்கும், அவர் ப்ரதீகங்களாகிய வேதம், சாஸ்திரம் முதலானவைகளெல்லாம் வாசிகமாக அமைந்துள்ளன. இயற்கையில் அழகு செய்து நிற்கும் நிலவு நட்சத்திரங்கள் விராட் புருஷனாகிய சிவபெருமானுக்கு அணிகலனும் ஆஹார்யங்களாக அமைகின்றன. வையகத்தின் உள்ளத்தில் பாவமாகப் பிரகாசிப்பதன் மூலம், ஸத்வகுணமுள்ளவராகவும் ஆகின்றார் சிவபெருமான். எனவே மங்களமாக இருக்கின்ற சிவபெருமானை, எடுத்துள்ள நூல் இனிது முடிதற் பொருட்டு வணங்கியவாறு.

● நாட்டிய சாஸ்திரம் 'பரதருடைய நாட்டிய சாஸ்திரத்தில்' பின் வருமாறு கடவுள் வணக்கம் அமைந்துள்ளது :—

"பிதாமஹராகிய பிரம்மாவையும், சிவபெருமானையும் தலையால் வணங்கி, அயனால் அருளப் பட்ட நாட்டிய சாஸ்திரத்தைக் கூறுகிறேன்" என்றிவ்வாறு ஆரம்பிக்கிறார் பரதர்.

'சார்ங்க தேவர்' இயற்றிய 'ஸங்கீத ரத்னாகரத்திற்கும்' 'அபிநய தர்ப்பணத்திற்கும்' இவ் விஷயத்தில் யாதொரு வேறுபாடும் காணப்படவில்லை.

நாட்டிய உற்பத்தி

நாட்ய வேதம் ததெள பூர்வம்
3 3 3
பரதாய சதுர்முக : ||
4 2
தத : ச பரத : ஸார்தம்
4 4
கந்தர் வாப்ஸரஸாங் கணை : || 2 ||
3 4 3

நாட்யம் ந்ருத்தம் ததா ந்ருத்யம்
2
அக்ரே சம்போ : ப்ரயுக்தவான் ||
3 4
ப்ரயோகம் உத்ததம் ஸ்ம்ருத்வா
3 4
ஸ்வப்ரயுக்தம் ததோ ஹர : || 3 ||

தண்டுனு ஸ்வ கணுக்ரண்யா
3 3 3
பரதாய ந்யதிதிசத் ||
4 33
லாஸ்ய மஸ்யாக்ரத : ப்ரீத்யா
3
பார்வத்யா ஸமதிதிசத் || 4 ||
3 3

புத்வாத தாண்டவம் தண்டோ :
4 2 3
மர்த்யேப்யோ முனயோவதன் ||
4 3
பார்வதீ த்வநு சாஸ்திஸ்ம
லாஸ்யம் பாணுத்மஜாம் உஷாம் || 5 ||
3

தயா த்வாரவதீ கோப்ய :
3 3
தாபி : ஸௌராஷ்ட்ர யோஷித :
4
தாபி : து தத்தத் தேசியா :
3
ததசிஷ்யந்த யோஷித : || 6 ||
3

ஏவம் பரம் பரா ப்ராப்தம்
ஏதல் லோகே ப்ரதிஷ்டிதம் ||
2

●●● முன்பு, அயன் பரதருக்கு நாட்டியம் எனும் 'வேதத்தை' அளித்தார். பரதர், கந்தருவர், அப்ஸரர் எனும் இவர் குழாத்துடன், சிவபெருமான் முன்பாக 'நாட்டியம்' 'நிருத்தம்' 'நிருத்தியம்' என இவைகளை நிகழ்த்தினர்.

தான் முன்பொரு முறை கையாண்ட திண்மையுள்ள நடன முறையை, பரதருக்குக் கற்பிக்குமாறு சிவபெருமான் தன்னுடைய கணத்தலைவரான 'தண்டு' என்பவருக்குக் கட்டளையிட்டதோடு 'லாஸ்யம்' எனும் நிருத்திய வகையைக் கற்பிக்குமாறு பார்வதியையும் பணித்தார்.

முனிவர்கள் 'தண்டு' விடமிருந்து தாண்டவத்தையும், பாணுசுரன் மகள் உஷை, உமையவளிட மிருந்து லாஸ்யத்தையும் கற்றனர்.

உஷையிடமிருந்து துவாரகை வாசிகளான கோபிகைகளும், அவர்களிடமிருந்து ஸௌராஷ்டிர தேசத்துப் பெண்களும் முறையே கற்றுக் கொள்ள, இப்படிப் பரம்பரையாக உலகத்தில் நாட்டியம் நிலை கொண்டது.

● *ஓதுவது விலக்கப்பட்ட ஒரு (விடுமுறை) நாளில் தன் அநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு புதல்வர்கள் தன்னைச் சூழ உட்கார்ந்திருக்கும் பரத முனிவரை அணுகி ஆத்திரேயர் முதலான முனிவர்கள் பின்வருமாறு கேட்டார்கள் :—*

"பெரியவரே! பகவான் நன்கு அமைத்துக் கொடுத்த, வேதங்களின் ஸாரம் அடங்கிய 'நாட்டிய வேதம்', எப்பொழுது, யார் பொருட்டு அமைக்கப் பட்டது? இதன் அங்கங்கள் என்ன? பிரமாணம் என்ன? முறை என்ன? எல்லாவற்றையும் உள்ளது உள்ளபடி எங்களுக்குக் கூறவேண்டும்."

இதைக் கேட்ட பரத முனிவர் 'அயன் அமைத்து உதவிய இதன் உற்பத்தியை ஒருமையுடன் நீங்கள் கேட்க வேண்டும்' என்று சொல்லிக் கூறத் தொடங்கினர்.

'கிருதயுகம் முதலாகப் பல யுகங்களிலும், ஸ்வாயம்புவ மநு, வைவஸ்வத மநு முதலானோர்கள் தோன்றிய பின்னரும் மக்களிடத்தில் ஒழுக்கம் குன்றி அழுக்காறு, அவா, வெகுளி இவைகள் மிகுந்தன.

இன்பமும் துன்பமும் குழம்பி நின்றன. ஜம்பூ த்வீபத்தில் யக்ஷர்கள், ராக்ஷஸர்கள்,

நாகர்கள், தேவர்கள், அரக்கர்கள் என எல்லோரும் பரவினர்,

அவ்வமயம் இந்திரன் முதலான தேவர்கள் அயனிடம் "எல்லா வருணத்தவருக்கும் ஏற்றதொரு வேதஸாரத்தை அழகிய முறையில் அமைத்துத் தரவேண்டும். பார்த்தும், கேட்டும் களிப்படையும் முறையில் அது அமையவேண்டும்; 'ஐந்தாவது வேதமென்றே' அமைத்துக் கொடுங்கள்" என்று இவ்வாறு கேட்டுக் கொண்டார்கள்.

இந்திராதிகளின் வேண்டுகோளுக்கிணங்கி, வேதங்கள், வேதாங்கங்கள் ஆகிய யாவற்றையும் ஒரு முறை நினைந்து, உறுதிப் பொருள்களை எல்லோருக்கும் வழங்கும் திறமை வாய்ந்த ஐந்தாவதான 'நாட்டிய வேதத்தை' அமைத்தார் அயன். அதன் வரலாற்றை நான் விவரமாகக் கூறுகிறேன்.

ரிக் வேதத்திலிருந்து 'வசன'த்தையும் ஸாம வேதத்திலிருந்து 'கீத'த்தையும், யஜுர் வேதத்திலிருந்து 'அபிநய'த்தையும், அதர்வ வேதத்திலிருந்து 'ரஸ'ங்களையும், எடுத்துக் கொண்டார்.

இம்மாதிரியாக யாவற்றையும் உணர்ந்த அயனல் நாட்டிய வேதம் நிர்மாணிக்கப் பட்டது.

பின்பு பிரம்மா இந்திரனை அழைத்து, 'தேவர்களுக்கு இதை நீ கற்பிப்பாயாக. திறமையும், புத்தி கூர்மையும், களைப்பைப் பொருட் படுத்தாமையும் உள்ளவர்களிடையே இது நன்கு பரவட்டும்" என்று கூறினர்.

இந்திரன் வணக்கத்துடன், "சிறந்தவரே! இந்த நாட்டியத்தைக் கற்கவோ, அறியவோ, உபயோகிக்கவோ தேவர்கள் சக்தி இல்லாதவர்கள்; தகுதி வாய்ந்த முனிவர்களிடம் இது வழங்கப் பட்டால் தான் நலம்" என்று பதிலளித்தான்.

இந்திரன் இவ்வாறு கூறி விடவே என்னை அழைத்து 'உன்னுடைய புத்திரர்கள் நூற்றுவருடன் இதை நீ பரப்புவாய்' என்று கூற, நான் அவரிடமிருந்து நாட்டியத்தைக் கற்று என் புத்திரர்களுக்கு உள்ளபடி கற்பித்தேன்.

●● பரதருடைய புதல்வர்களென 'சாண்டில்யன்' முதலாக 'வீரன்' இறுதியாக நூற்றுவர்கள் குறிக்கப் படுகின்றனர்.

இம்மாதிரியாக அயன் கட்டளைப்படி உலகத்தின் நன்மைக்காக, இடம் பொருள் ஏவலுக்குத் தகுந்தவாறு பிள்ளைகளின் தகுதிப்படி ஒவ்வொரு விஷயங்களையும் கற்பித்தேன்.

நடன விஷயமாக நான் கையாண்ட முறைகளாவன: பாரதீ, ஸாத்வதீ, ஆரபடீ என்னும் இவைகளாகும்.

இம்முறைகளைக் கையாண்டு முடித்த பின்னர் பிரம்மாவை யணுகித் தெரிவித்த போது, 'கைசிகீ' என்னும் முறையையும் சேர்த்துக் கொள்ளும்படி கூறி, அதற்கு வேண்டிய உபகரணங்களையும் தான் அமைத்துத் தருவதாகக் கூறினர்.

ஏனெனில் சிவபெருமான் ஒரு முறை சிருங்கார ரஸத்திலே பிறந்ததும், நடனத்திற்குரிய ஆபரண வகைகள் கொண்டதுமான முறையைக் கையாளப் பார்த்திருக்கிறேன். பெண்களுக்கே அது மிகவும் கைவரும் நிலையிலுள்ளது. அவர்களன்றி ஆண்கள் அமைவுடன் அந்தக் கையாள முடியாது, என்பதை நான் தெரிவிக்கவே, கைசிகி முறைக்கேற்ப 'மஞ்சுகேசி' முதலாகக் 'கலபை' இறுதியாக பத்தொன்பது பேர்களைப் படைத் தளித்தார் பிரம்மா. நாரதர் முதலான கந்தருவர்களையும் ஸ்வாதி பாண்டர் என்பவரையும் கானம் செய்வதற்காக ஏற்படுத்தினர் அவர்.

இம்மாதிரியாக நாட்டியத்தை நன்கு அறிந்து, என் பிள்ளைகளுடனும் ஸ்வாதி, நாரதர் இவர்களுடனும் பிரம்மாவை அணுகி 'இனி நான் என்ன செய்யவேண்டும்' என்றேன்.

●● கைசிகீ முதலானவைகள் கலையைக் கையாளும் முறைகளைக் குறிப்பன. ஒரே பொருள் பல முறையாக வெளியிடப்படலாமல்லவா?

● அப்பொழுது தேவாஸுர யுத்தம் முடிந்து இந்திரன், வெற்றிக்கு அறிகுறியாகக் கொடியேற்று விழா ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தான். இதை எண்ணி அயன் அப்பொழுது நாட்டிய வேதத்தை முதலாவதாக வெளியிடக் கட்டளை யிட்டதோடு 'மங்களாசரணம்' தானே செய்து விட்டதாயும் குறிப்பிட்டார்.

தேவாஸுர யுத்தத்தை நாங்கள் அபிநயம் பிடித்துக் காட்டினோம். மகிழ்ந்த தேவர்கள் ஒவ்வொருவரும் எங்களுக்குப் பரிசு வழங்கினர்.

(தொடரும்.)

பொற் கனவு

'வேம்பு'



பேய்க்காற்று வீசியது. பெரு மழை பெய்தது... அந்த முற்றும் நிலையிலிருந்த காதல் பயிர்.....!

அயர்ந்த தூக்கத்தின் நடுவே புரண்டு புரண்டு படுத்தேன். என் அருகே கம்பீரமான குரலில் யாரோ பேசுவது போலிருந்தது. ஆம்... அதே உருவம்; நேற்று மாலை சகாதேவன் ரதத்தின் அருகே பார்த்தேனே, அதே சிலை. கவனிப்பாரற்று, அந்தச் சிற்பக் களஞ்சியத்தின் ஒரு ஓரத்தில் செடியும் கொடியும் துணை செய்து பாதுகாக்கக் கிடந்ததே அதே சிலைதான் .:. அது சொன்ன கதை, ஆகா! கனவிலும் பொற்கனவாக எனக்குக் கிடைத்ததே அந்தக் கதை! அரசகுமாரி செந்திருவின் காதலையும், சிற்பி சந்திரவர்த்தனின் கலைக்கான தியாகத்தையும், மன்னன் அபராஜிதனின் பிடிவாதத்தையும் அது கூறும்போது கனவாகவே எனக்குத் தோன்றவில்லை......

"நண்பரே... சிலை பேசுகிறதே என்று ஒரு வேளை அஞ்சலாம். ஆயிரம் ஆண்டாகத் தனித்திருந்துவிட்டு - கவனிப்பாரற்று இருந்துவிட்டு - இன்று என்னைக் கவனித்தவரும் ஒருவர் இருக்கிறார் என்றறிந்தவுடன் அடக்கி வைத்திருந்த உள்ளத்தை என்னால் ஒரு வினாடி கட்டுப்படுத்த முடியவில்லை. நான்தான் இந்தச் சுவர்க்கத்திலேயே கடைசியாகச் செதுக்கப் பட்டேன். என் கண்ணெதிரே மாபெரும் கலைக் கனவு அழியும்போது...பின் வந்தவர்கள் எங்களை அவமதித்துப் புறக்கணித்த அசட்டையை எண்ணும் போது...நீங்களெல்லாம் சரித்திரம் படித்தவர்கள். மகேந்திரனின் கனவை, மாமல்லன் ஒரு வகையில் பூர்த்தி செய்தான் என்று அறிந்திருப்பீர்கள். அந்த இருவருடைய மனோராஜ்யத்தில் எப்பேர்ப்பட்ட பொற்கனவு எழுந்ததோ! நிச்சயமாக மகேந்திரன் இந்த அழிவை எண்ணியிருக்கமாட்டான். உம்...எதற்கு அந்தக் கதையெல்லாம்...நான் சொல்ல வந்தது அதல்ல. விடிவதற்குள்ளே நான் என் இருப்பிடம் போய் விட வேண்டும். ஆயிரமாயிர மாண்டுகள் அடக்கி வைத்திருந்ததை இன்று கொட்டி விடும் போது படபடப்பு உண்டாகலாம். என் கண்ணெதிரே என்னை வளர்த்து, என்னெதிரே வளர்ந்த அந்தச் சிற்பியும், அரசனின் மகளுடைய காதலும்...மனதை விட்டு மாறுமா?

* * *

அப்பொழுது பல்லவ நாட்டை யாண்ட அபராஜித வர்மனுக்கு முன்னமேயே பல்லவர்களின் பழம் பெயர் அழிந்து விட்டது. யார் பொறுப்பு என்றெல்லாம் நான் கூறத் தயாராயில்லை. ஆனால்...

அபராஜிதன் தன் காலத்தை அமைதியாகவே கழித்துவிட விரும்பினான். காஞ்சியை விட்டு, அழிந்து போகும் இந்தச் சௌந்தர்ய நகரத்து அரண்மனையில் சுகபோகமாகக் காலங் கழித்தான். தனக்குப் பிறகு நாட்டை ஆள ஆண் குழந்தையில்லையே, என்ற கவலை அவனுக்கு இல்லை. ஒரே மகள் செந்திருவின் அழகான மழலைப் பேச்சைக் கேட்டுக் கொண்டு காலங் கழித்தான். அவன் கண்ணெதிரே பூர்த்தியாகாத சிற்பக் கோயில்கள், கலைக் கனவுகள், நின்றுகொண்டிருந்தது தெரியவில்லை; பாதி நகரத்தைச் சாப்பிட்டு இன்னும் பாதியைச் சாப்பிட ருசியுடன் நாக்கை நீட்டி நீட்டி வந்து கரையில் மோதும் அலைகள் மற்றுமொரு கோயிலைத் தகர்க்கப் பார்ப்பது நினைவில் படவில்லை.

இந்தச் சமத்தில் தான் அவனுடைய பழைய நண்பர் பெருந்தகையார் தென்னாடு சுற்றி விட்டு வந்து சேர்ந்தார். அரசன் சிற்பப் பொக்கிஷத்தின் நடுவே, சிறிதும் உணர்ச்சி யின்றி, ரஸிகத் தன்மையின்றி யிருப்பதைக் கண்டார். மனம் புழுங்கியது அவருக்கு. மெள்ள மெள்ள தினம் தினம் பேசும்போது பூர்த்தியாகாத இந்தக் கலைச் சுவர்க்கத்தைப் பூர்த்தி செய்யும்படி அரசனுக்கு ஆசை மூட்டி எழச் செய்தார். அவனது

முப்பாட்டனை மகேந்திரனின் இலட்சியத்தை எடுத்துக் காட்டினர். இடித்துக் கூறினர். ஆனல் விட்ட குறையைப் பூர்த்தி செய்ய சிற்பி? பழைய சிற்பிகளின் வம்சம்தான் பூண்டற்றுப் போய்விட்டதே! அவர்கள் சிருஷ்டித்த சிற்பம் அழியு முன்னமேயே அவர்களே அழிந்து விட்டார்களே! அவர்கள் விட்டதைத் தொடர்ந்து செய்ய அவ்வளவு இலாகவமான சிற்பிகள்? இந்த எண்ணம் வந்து அரசனுக்கு எழுந்த ஆசையின் குறுக்கே நின்றது,

அந்தச் சமயம் நல்ல.காலமாக ஒருவன் வந்து சேர்ந்தான். கடவுளேதான் அவனை அனுப்பியிருக்க வேண்டும். இளம் முகம் வாடி வதங்கியிருந்தது. தோள்வரை சுருண்டு சுருண்டு தொங்கிய தலைமயிர் வாரப் படாது, சிடுக்குப் பிடித்திருந்தது. கன்னத்தின் இளமையை அந்த வளர்ந்த தாடிகள் மறைத்து வறுமையை வெளிக்குக் காட்டிக் கொண்டிருந்தன. ஊரின் பெருமையைக் கேள்விப்பட்டு, உயிர்விட்டாலும் அந்தக் கலைப் பூமியில் விடவேண்டும் என்ற நினைவோடு அங்கு மெள்ள மெள்ள வந்துவிட்டான். அவன் சாப்பிட்டு மூன்று நாட்களுக்கு மேலாகிவிட்டது. அப்பொழுது பல்லவ நாட்டிலேயே, சரியற்ற ஆட்சியினல் மக்கள் உண்ண உணவுக்குத் தவிக்கும்போது, பிற ஊரான் ஒருவனுக்கு எப்படிக் கொடுப்பார்? மாமல்லபுரத்தின் எல்லையை அடைந்தவுடன் முதல் சிற்பத்தைப் பார்த்தவுடனேயே கண்கள் அகல விரிந்தன. பசி மறைந்தது. ஆனல்... களைப்பும், சோர்வும், திடீரென எழுந்த உற்சாகமும் அப்படியே மயங்கிச் சுருண்டு விழும்படிச் செய்தன.

ஊர்ச் சேவகர்கள் அவனைத் தூக்கிக் கொண்டு அரசன் முன் கிடத்தினர். அவன் 'பை சோதனையிடப்பட்டது. உளிகள், சுத்திகள், தூலிகைகள்...!அது என்ன யாழ் போன்ற ஒரு இசைக் கருவி.? புழுதிபடிந்த அது என்ன?

பெருந்தகையார் அங்கு வந்தார் இவைகளைக் கண்டார். ஆனந்த மேலீட்டால் குதித்தார். 'பலித்து விட்டது...! மகேந்திரனின் பொற்கனவு. பலித்துவிட்டது......! உன் எண்ணமும்; இதோ ஈடேறும்...! இவன் ஒரு சிற்பி......!'' என்று கூவினர். ஆனல் மறு கணம் ஸ்மரணையற்றுக் கிடந்த அவனது முகத்தில் இன்னும் மறையாது இருக்கும் ஜீவகளையைப் பார்க்கும்போது அவர் முகம் சுண்டியது. சுற்றுமுற்றும் பார்த்தார். கூவினர். ''பெருமரம் போல் நிற்கிறீர்களே, உங்கள் கண்ணெதிரே உயிரையளிக்க வந்த சிற்பியின் உயிர் போய்க் கொண்டிருப்பதைக் கண்டு வெறும் கல்போல் நிற்கிறீர்களே.... ஓடுங்கள். அரண்மனை வைத்தியரைக் கொண்டு வாருங்கள்'' என்று படபடப் புடன் கூவினர்.

சிற்பி வைத்தியரின் உபசரணையின்பின் கண்விழித்தார். ஆனல் ஆண்டாண்டுக் களைப்பு அவனைத் தலை தூக்காமல் அடித்தது.

* * *

வடக்கே யிருந்து வந்தான் அவன். இன்னும், அவனைப் போல் நூற்றுக் கணக்கான சிஷ்யர்களுடன், வடக்கே ஓரிடத்தில் ஆரம்பித்து இவன் நடத்திய வேலை, அன்னியர் படை யெடுப்பால் அழிக்கிப்படவே, ஊர் கொளுத்தப் படவே, மக்களின் சொத்துக்கள் சூறையாடப் படவே, இந்தக் கலைஞர்கள் தென்னடு நோக்கி வந்தார்கள். பசிப்பிணியறியாத தென்னட்டில் அந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் அஸ்தமன சமயம் நாடு வறுமையில் சூழ்ந்திருக்கையில் இந்தச் சிற்பியைக் கவனிப்பவர் யார்?

அரச குமாரி செந்திரு, மெள்ள அறையைத் திறந்து வந்தாள். யார் அந்தப் புது ஆள் பார்ப்போம் என்றுதான். பதினேழு ஆண்டு வளர்ச்சி, அவள் உடலில் பூரண செளந்தர்யத்தை உண்டாக்கியிருந்தது. கண்ணயர்ந்து உறங்கும் சிற்பியைக் கண்டு, பிறகு பார்ப்போம் எனத் திரும்பி விட்டாள்.

சிற்பி கண்விழித்தான். அரண்மனையையும், அருகே அரசனையும், பெருந்தகையாரையும் கண்டவுடன் முதலில் ஒன்றும் புலப்படவில்லை. மெள்ள மெள்ளப் பெருந்தகையாரின் பேச்சிலிருந்து அறிந்து கொண்டான். நீண்டநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பூர்த்தியாகாத கலை நகரத்தை மீண்டும் புதுப்பிக்கத் தனக்குள்ள ஆர்வத்தைத் தெரிவித்தான் சிற்பி. அரசன் அபராஜிதனுக்குப் பெருமகிழ்ச்சி.

நாட்கள் சில ஓடின. அந்தப் பிராந்தியத்தில் மீண்டும் 'கிளிங்' 'கிளிங்' என்ற உளியின் ஓசை கேட்டது. தன் தலைவன் மாமல்லபுரம் வந்துள்ளான். தொழிலைத் துவக்கலாம் என அறிந்த நாலுதிசை சென்று வாடிய சிற்பிகள், திபு திபுவென மாமல்லை அடைந்தார்கள். மீண்டும் ஜீவகளை அங்கு உண்டாகியது.

அந்தச் சிற்பியின் இள வயதும், பால் பொழியும் அந்த நிலவு நாளில் கடற் கரையில் 'சிதாரிலிருந்து அவன் எழுப்பும் இனிய நாதமும் செந்திருவின் உள்ளத்தில் புகுந்து இன்ப

வேதனையை உண்டாக்கும். 'சந்திர வர்த்தனன்'...ஆ! என்ன அழகான பெயர்...என்று அரண்மனையின் மேல் மாடத்தினின்று நீலக் கடற் கரையின் வெண் மணலில் அரசன், பெருந்தகையார் சூழ சந்திரவர்த்தனனின் சிதார் வாசிக்கும் நிழல் உருவத்தைக் கண்டு கண்டு பெருமூச் செறிவாள். தானும் போய் அவர்களிடையே இருந்து இசையைப் பருகினால்......!தகப்பனிடம் இதை ஒருநாள் தெரிவித்துவிட்டாள். "அதற்கென்ன கண்ணே! கடற்கரைக்கு அந்த இரவில் வரவேண்டுமா......சந்திரனை விட்டு இங்கேயே சிதார் வாசிக்கச் சொல்லிக் கேட்போம்' என்றார் அரசர் அபராஜிதர்.

"அந்தக் கருவி உண்டாக்கும் நாதம் இன்பக் கடலில் அமிழ்த்துகிறது. இந்தச் சிற்பங்களுக்குப் பகல் வேளையில் உயிருண்டாக்கும் அவன், இரவில் சிதாரால், உயிரிருந்தும் உயிரற்ற நம் உடலுக்கு ஜீவனை உண்டாக்குகிறான்" என்றார் அருகாமையி லிருந்த பெருந்தகையார்.

செந்திருவின் மார்பகம் விம்மித் தணிந்தது, உடலில் இளஞ் சூடு ஏறி மனத் திரையில் சந்திர வர்த்தனனின் உருவத்தை அழுத்தமாக விழும்படிச் செய்தது.

மறுநாள் முதல் சந்திர வர்த்தனனின் சிதார் ஒலி அரண்மனையிலேயே கேட்க ஆரம்பித்தது. காலைமுழுதும் 'கிளிங்' 'கிளிங்' என்று உளியால் பாறையில் உருவத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த அதே விரல்கள் இரவில் சிதாரின் மெல்லிய கம்பிகளை மீட்டி அந்தப் பிராந்தியம் பூராவும் தேவ கானத்தை யெழுப்பியது. இதய ஒலி என்றே எண்ணினாள் செந்திரு.

அவனது அழகான முகம், நீண்ட கைகள், அந்தக்கரங்கள் மீட்டும் இனியநாதம், அகன்ற தோள்கள், விசாலமான நெற்றி......இவைகளை நினைக்கும்போது ஒவ்வொரு சமயம் அவள் சிதாரின் ஒலியையே மறந்து விடுவாள். அந்தச் சிற்பியின் இன்முக வடிவில் லயித்து இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பாள்.

நாட்கள் உருண்டன. அங்கங்கே பூர்த்தியாகாத பல சிற்பங்கள், பூர்த்தி செய்யப்பட்டன. என்னை அப் பொழுது தான் உருவாக்கிக் கொண்டிருந்தான் சந்திரவர்த்தனன். யார் உருவத்தை மனத் திரையில் பதித்து இங்கே கல்லிலே அதைக் கொண்டு வருகிறான்! யார் வடிவமாக அது இருக்க முடியும்? பெயருக் கேற்ற அழகு பொலிந்து கிடக்கும் செந்திருவைத் தவிர வேறு யாராக இருக்கமுடியும்!

ஒவ்வொரு சமயம் செந்திரு அங்கு வருவாள், 'மற்றொரு அரச குமாரியை சிருஷ்டி செய்கிறேன்' என்பான், சந்திரவர்த்தனன். குறும்புக் கண்களால் ஒருமுறை சிற்பத்தைப் பார்ப்பது போல் சிற்பியைப் பார்த்துவிட்டு கலுக் கென்று சிரிப்பாள். அந்தச் சிரிப்பொலி, தூரத்தே கேட்கும் 'கிளிங் கிளிங்' என்ற உளியின் ஒலியோடு சேர்ந்து அந்தப் பக்கம் பூராவும் எதிரொலிக்கும். சிற்பியின் உள்ளத்தில் அந்த எதிரொலி புகுந்து இன்ப வேதனையை உண்டாக்கும்.

இப்பொழுதெல்லாம் வெண்ணிலவில் இதே கடற்கரையில் சற்றுத் தள்ளி, சந்திரவர்த்தனனும், செந்திருவும் நேரம்போவது தெரியாமல் கழிக்க ஆரம்பித்தார்கள். ஊர் அமைதி யுற்று, அரசன் உறங்கி, கடற் கரையினின்று மெல்லிய சிதார் ஒலி காற்றிலே மிதந்து வந்தது. மேன் மாடத்தில் நேரத்தை எதிர்நோக்கி நிற்கும் செந்திருவின் காதில் விழுந்தவுடன், அரண்மனையை விட்டுக் கடற்கரைப் பாதையில், கரையை அடைவாள். சிறிது நேரம் இசை வெள்ளம். பின் மௌனம்...நான் சொல்லித்தான் தெரியவேண்டுமா! சந்திரவர்த்தனனின் சிற்பம் உயிருடன் வளர்வது போல் காதலும் வளர்ந்தது. ஆனால் முற்றும் சமயம், பயிர் முற்றும் சமயம் எங்கிருந்தோ பேய்க் காற்று வீசியது. பெருமழை பெய்தது. மகா வெள்ளம் எடுத்தோடியது.........அதிலே அந்த முற்றும் நிலையிலிருந்த காதல் பயிர்.........

* * *

அரசன் அபராஜிதன் ஒருநாள் இரவு தன் மகளைத் தேடி வந்தான். படுக்கையிலே காணவில்லை. அவளுக்கு எதிராகச் சிலர் கோள் சொல்லிக் கொடுத்ததற்கு ஏற்ப, அவள் அங்கு இல்லை.பின் எங்கே? அரண்மனையின் மேல் மாடத்தில் ஏறிக் கடற்கரையை நோக்கினான். மெல்லிய சிதார்ஒலி கேட்டது. இரண்டு உருவங்கள் நெருங்கி உட்கார்ந்து கொண்டிருப்பது தெரிந்தது.

ஏனோ திடீரென அபராஜிதன் உடல் துடித்தது. கோபக் கனல் உடல் இரத்தத்தைச் சுண்டச் செய்தது.

மறுநாள் காலை சந்திர வர்த்தனன் இருக்குமிடத்துக்கு விரைந்தான் அரசன். "போதும் நிறுத்து......உனது உளியைத் தொலைவில் விட்டெறி! சிற்பமும் வேண்டாம்......சிலையும் வேண்டாம்......எவர் கனவும் பலிக்கவேண்டாம்...... என் உப்பைத் தின்று எனக்கே துரோகம் இழைக்க முயற்சித்தாய்......உன் சிதாரை நம்பினேன்......உன் சிதார் ஒலியில் மயங்கிச் செந்திருவையும் களங்க மின்றிப் பழக விட்டேன்...... போதும்; இன்றுடன் இங்கு உங்கள் நாடகம்..." எனக் கூவினான்.

முதலில் சந்திர வர்த்தனனுக்கு ஒன்றும் புரியவில்லை. அப்பொழுது கீழே வைத்த உளிதான். அமைதியாக அரசனைப் பார்த்தான். பிறகு விஷயம் புரிந்துவிட்டது. "காதலை நான் மட்டுமா உண்டாகும்படிச் செய்தேன். தனி ஒருவரால் உண்டாக்க முடியாததே அது. அவள் உள்ளத்திலும் எழுந்த அது, என் இதயத்திலும் பிறந்தது. இரண்டும் சேர்ந்து வளர, அந்தத் தூய தெய்வீகத் தன்மையை இவரால் அறியமுடியவில்லை. இதுவா துரோகம்?" என்று முணுமுணுத்தது இதயம்.

ஊரே பொலிவிழந்து விட்டது. காற்றில் இப்பொழுது 'கிளிங் கிளிங்' என்ற ஒலி மிதந்து வரவில்லை.ஆடுகளின் கழுத்தில் கட்டப்பட்ட மணி

யோசை சிலசமயங்களில் கிணிங் என்று சப்திக்கும். அது அந்தச் சூன்யமான பிரதேசத்தின் நினைவை அதிகரிக்கும்.

அரச குமாரிக்கு இதயமே வெடித்துவிடும் போலிருந்தது. பாதி இரவில் சிதார் ஒலிப்பது போல் அவள் கண்முன்னே இன்ப நினைவுகள் தோன்றி மறையும். பெருந்தகையார் அரசரின் இந்தப் பைத்தியக்காரச் செயலைக் கேள்விப்பட்டு, மறுபடியும் தென்னாடு சென்று விட்டார்.

ஒளி அணையும்போதுதான் பிரகாசமாக எரிகிறது. வட நாட்டிலிருந்து புதிய படையெடுப்பு நேர்ந்தது. படைகள் திடீரென ஒருநாள் காஞ்சிபுரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

'மாமல்லபுரத்தை நோக்கி வருகின்றன' என்ற செய்தி மாமல்லபுர மக்களின் காதில் விழுந்தன. முறிந்த காதலின் அடியால் சோர்வுற்றிருந்த சந்திர வர்த்தனனுக்கு இச் செய்தி பெரும் அதிர்ச்சியை உண்டுபண்ணியது. அரசனை அவன் சந்தித்து, இரண்டு மாதங்களுக்கு மேலாகின்றன. படையெடுப்பு நேர்ந்தால் - கலைத் தன்மை அறியாப் போர் வீரர்கள் சிற்பத்தை அழித்து இந்த அழகைக் கெடுத்துவிட்டால்...... அரசன் சிறை பிடிக்கப்பட்டு அரச குமாரி கவர்ந்து செல்லப்பட்டால்......இதை எண்ணியதும், ஒரு கணம் உடல் குலுங்கியது. மறு கணம் துள்ளி யெழுந்தான். அரண்மனையை நோக்கி ஓடினான். எதிர்பாராமல் சந்திரவர்த்தனன் மீண்டும் வருவது கண்டு அரசனுக்குப் புரியவில்லைதான்.

"அரசே...இனித்தாமதிக்க என் மனம் தாளவில்லை......என்னை நீங்கள் வெறுத்துத் துரோகியெனக் கருதினாலும், படையெடுப்பால் அந்நியர் நுழைந்து இந்நகரின் அழகைக் குலைப்பார்கள். தலைமுறை தலைமுறையாகக் காப்பாற்றப்பட்டு வந்த சிற்பம் அழிக்கப் படும்......நம்மிடம் போர் வீரர் இல்லையென்பது தெரியும்......போர்த் தொழிலை மறந்து யுகமாகிறது என்பது தெரியும்......எதிர்த்து நிற்கச் சக்தியில்லை யென்பதும் தெரியும்......ஆனால் என்னால் ஒருகணம் கூட அந்நியப் படையெடுப்பைச் சகிக்க முடியாது......என் சிஷ்ய சிற்பிகள் முன்னூறுபேர் இருக்கிறார்கள். உளிபிடித்த அவர்களது கரங்களிலே கத்தியைக் கொடுப்பேன்......கலையைக் காப்பாற்றுவேன்," என்று கதறினான்.

அரசனுக்கு அவன் பேச்சு துளிகூடக் காதில் விழவில்லை.

ஆனால் சந்திர வர்த்தனனால் அப்படி யிருக்க முடியவில்லை. அன்று இரவு பட்டரையில் வாட்கள் நெருப்பில் காய்ச்சப்பட்டுக் கூர்மையாக்கப் பட்டன. படையெடுத்து வரும் அன்னியர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்ருவிடினும் சிற்பங்களைக் காப்பாற்றுவது என, முடிவு செய்தான் சந்திரவர்த்தனன்.

அழும்புக்கார அபராஜிதனைச் செந்திரு எவ்வளவோ வேண்டினாள். ஒரு தடவையாவது சந்திரவர்த்தனனோடு பேச அவளுடைய உள்ளம் துடித்தது. 'சே! அரச குமாரியா யிருந்தாலென்ன......என்ன உரிமை யிருக்கிறது? தங்கக் கூண்டில் அடைபட்ட கிளி யல்லவா?'

புழுதியும், பேரொலியும் மாமல்ல புரத்தின் மூன்று மைல்களுக் கப்பால் கிளம்பின. பாறையின் உச்சியின் மீதிலிருந்து இதைக் கண்டான் சந்திர வர்த்தனன்.

திக்பிரமை பிடித்தவன்போல் அரண்மனையில் உட்கார்ந்திருக்கும் இவனும் 'பல்லவ' குல அரசனென்று கூறிக் கொள்ள என்ன பொருத்தம்' என்று ஒரு கணம் எண்ணினான்.

அணி வகுத்து உருவிய கத்திகளுடன் அந்தச் சிற்பிகள் சாலை வழியே விரைவதை மேன்மாடத்தினின்று பார்த்தாள் அரசகுமாரி. அப்படியே குதித்து அந்தப் படையின் தலைவனாக முன்னாலே செல்கிறாரே...அந்த வீரர்-கலைஞர் சந்திரவர்த்தனனுடன் தானும் சேர்ந்து விட்டால் என்ன, என எண்ணியது உள்ளம். ஆனால்......

இந்த எதிர்ப்பை எதிரிகள் எதிர்பார்க்கவில்லை. இந்தச் சுண்டைக்காய் சைன்யத்தை எதிர்க்கவா அவர்களால் முடியாது! மூன்று மணி நேரம் விடாது போர் நடந்தது. சிற்பிகள் ஒருவராவது பிழைக்க வில்லை.

கடைசி வரை வீர யுத்தம் புரிந்து சிற்பத்துக்காக உயிரை விட்டான் சந்திரவர்த்தனன். அகன்ற மார்பின் நடுவே எதிரிகளின் கூரிய வாள் புகுந்தது.

ஒருவினாடியில் செய்தி ஊரில் பரவியது. மக்கள் அல்லோல கல்லோலப் பட்டு ஓடினர். அரண்மனையின் உப்பரிகையின் மீது நின்று கொண்டிருந்த செந்திரு அப்படியே சாய்ந்தாள்.. ஐயோ...கீழே எவ்வளவு பள்ளம்...

சைன்யங்கள் ஊருக்குள் புகுந்தன...உயிரற்ற சிற்பங்களின் ஜீவகளையை ஒருகணம் பார்த்துப் பிரமித்து விட்டாலும், அவர்கள் ரஸிக்கவா அங்கு வந்தார்கள்...!அந்தக் கடைசி மன்னன் அபராஜிதன்......"

என்று கூறியது அந்தச் சிலை.

* * *

"அந்தக் கடைசி மன்னன் அபராஜிதன் நாசமாகப் போகட்டும். கலையைக் குலைத்த பாவி எப்படிப் போனால் என்ன...!சிலைக்காக உயிர் விட்ட சந்திரவர்த்தனின் காதலைக் குலைத்தவன், மகேந்திரனின் பொற்கனவு ஈடேறாது செய்தவன்...... அவன் எப்படிப் போனால் என்ன...?" என்று கூவி விட்டேன் நான்.

ஆனால் உடனே திடுக்கிட்டுக் கண்விழித்தேன். அருகே யாரையும் காணோம். நீங்கள் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தீர்கள். வெடி வெள்ளி கிழக்கே முளைத்திருந்தது. உடல் நடுங்கியது.

அன்று பூராவும் இதே எண்ணம் உள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்தது.
ஆ! பொற்கனவு......என அடிக்கடி முணுமுணுத்தது இதயம். ●

அடவு ஜாதிகள்

பயிற்சி 7

ஆரம்பநிலை : (6-வது பயிற்சியைப் போன்றது.)

ஹஸ்தம் : கடகாமுகம்.
பாதங்கள் : ஸமநிலை.
உடல் கை : ஸமநிலை.
தலை கண்கள் : ஸமநிலை.



எண்ணிக்கை 1.

ஹஸ்தம் : கடகாமுகம்.
பாதங்கள் : எண்ணிக்கைக்குச் சற்று முன்பாகவே பாதத்தைத் தூக்கி, எண்ணிக்கையின் போது ஊன்றி மிதிக்கவும்.
உடல் கைகள் : ஸமநிலை.
தலை கண்கள் : ஸமநிலை.

எண்ணிக்கை 2.

ஹஸ்தம் : எண்ணிக்கையின் போது வலது கடகாமுக ஹஸ்த மானது அல பத்மமாக மாற வேண்டும்.

பாதங்கள் : எண்ணிக்கைக்குச் சற்று முன்பாகவே வலது பாதத்தைத் தூக்கி எண்ணிக்கையின் போது ஊன்றி மிதிக்கவும்.

உடல் கைகள் : வலது கையை வலது புறமாக உயரே தூக்கிக் கமானைப் போலக் கொணர்ந்து அப்பக்க மாகவே நன்கு நீட்டவேண்டும். அல பத்ம மாக மாறிய உள்ளங்கை மேல் நோக்கிய படி இருக்க வேண்டும். உடல் லாகவமாக வலது புறம் சற்றே வளைந்து கொடுக்க வேண்டும்.

தலை கண்கள் : வலது கையைத் தொடர வேண்டும்.

எண்ணிக்கை 3.

ஹஸ்தம் : எண்ணிக்கையின் போது வலது அல பத்ம ஹஸ்த மானது கடகா முக மாக மாற வேண்டும்.

பாதங்கள் : எண்ணிக்கைக்குச் சற்று முன்பு இடது பாதத்தைத் தூக்கி, எண்ணிக்கையின் போது ஊன்றி மிதிக்கவும்.

உடல் கைகள் : ஸமநிலைக்கு வரவேண்டும்.

தலை கண்கள் : ஸமநிலைக்கு வரவேண்டும்.

எண்ணிக்கை 4.

ஹஸ்தம் : எண்ணிக்கையின் போது இடது கடகா முக ஹஸ்தம், அல பத்ம மாக மாற வேண்டும்.

பாதங்கள் : எண்ணிக்கைக்குச் சற்று முன்பாகவே இடது பாதத்தைத் தூக்கி, எண்ணிக்கையின் போது ஊன்றி மிதிக்கவும்.

உடல் கைகள் : இடது கையை இடது புறமாக உயரே தூக்கிக் கமானைப் போலக் கொணர்ந்து அப் பக்கமாகவே நன்கு நீட்டவேண்டும். அல பத்ம ஹஸ்தமாக மாறிய உள்ளங்கை, மேல்நோக்கி இருக்க வேண்டும்.

தலைகண் : இடது கையைத் தொடரவேண்டும்.

எண்ணிக்கை 5.

ஹஸ்தம் : இடது அல பத்ம ஹஸ்தம் கடகாமுக ஹஸ்தமாக மாறவேண்டும்.

பாதங்கள் : இடது பாதத்திற்குச் சுமார் ஒரு அடி பின்னால் வலது பாதத்தை விரல்களினால் ஊன்ற வேண்டும்.

உடல் கைகள் : **வலதுகை :** வலது கையை உயரத் தூக்கிக் கொணர்ந்து பின்புறம் நன்றாக நீட்டவேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் உடலும் பாதி யளவு வலப் பக்கம் லாகவமாகத் திரும்ப வேண்டும்.
இடதுகை : நீட்டிய இடது கையானது ஸம நிலைக்கு வர வேண்டும். வரும்பொழுது ஹஸ்தம் கடகாமுகமாக மாறவேண்டும்.

தலைகண்கள் : வலது ஹஸ்தத்தைத் தொடர வேண்டும்.

எண்ணிக்கை 6.

ஹஸ்தம் : வலது கடகாமுக ஹஸ்தமானது அல பத்ம மாக மாற வேண்டும்.

பாதங்கள் : வலது பாதத்தை, இடது பாதத்திற்குச் சுமார் இரண்டடி முன்பாகக் கொணர்ந்து, நன்ருக உடலைக் கீழே தாழ்த்திப்பாதி யளவு உட்கார வேண்டும். (படத்தைக் கவனிக்கவும்.)

உடல் கைகள் : **வலதுகை :** வலது ஹஸ்தத்தை முன்புறமாகக் கொணர்ந்து நன்ருக நீட்டவேண்டும். நீட்டி முடியும்பொழுது கடகாமுக ஹஸ்தமானது அலபத்ம ஹஸ்தமாக மாற வேண்டும்.
இடதுகை : மாறுதல் இல்லை.
உடல் நன்ருகத் தாழ்த்தப் பட்டும், லாகவமாக நிமிர்ந்தும் இருக்க வேண்டும்.

தலை கண்கள் : வலது ஹஸ்தத்தைத் தொடர்ந்து செல்லவும்.

எண்ணிக்கை 7.

ஹஸ்தம் : வலது அலபத்ம ஹஸ்தம் கடகாமுக ஹஸ்தமாக மாற வேண்டும்.

பாதங்கள் : இடது பாதத்தை வலது காலுக்கு அருகில் இழுத்து விரல்களினுல் ஊன்ற வேண்டும். உடம்பின் பாரத்தை இடது கால் சுமக்க வேண்டும்.

உடல் கைகள் : **இடதுகை :** இடது கையை உயரத் தூக்கிக் கொணர்ந்து பின்புறம் நன்ருக நீட்ட வேண்டும். உடலும் தருந்தாற் போல் பாதி யளவு இடப் பக்கம் லாகவ மாகத்திரும்ப வேண்டும்.
வலதுகை : நீட்டிய வலது கையானது ஸமநிலைக்கு வர வேண்டும். வரும்பொழுது ஹஸ்தம் கடகாமுக மாக மாற வேண்டும்.

எண்ணிக்கை 8.

ஹஸ்தம் : இடது கடகாமுக ஹஸ்தமானது அல பத்ம மாக மாற வேண்டும்.

பாதங்கள் : இடது பாதத்தை, வலது பாதத்திற்குச் சுமார் இரண்டடி முன்பாகக் கொணர்ந்து, நன்ருக உடலைக் கீழே தாழ்த்தி, பாதி யளவு உட்கார வேண்டும் (படத்தைக் கவனிக்கவும்.)

உடல் கைகள் : இடது ஹஸ்தத்தை முன் புறமாகக் கொணர்ந்து நன்ருக நீட்ட வேண்டும். நீட்டி முடியும் பொழுது கடகாமுக ஹஸ்த மானது அலபத்ம மாக மாறவேண்டும்.
வலதுகை : மாறுதல் இல்லை.

தலை : உடல் நன்ருகத் தாழ்த்தப் பட்டும், மார்பு லாகவமாக நிமிர்ந்தும் இருக்க வேண்டும்.

தலை கண்கள் : இடது ஹஸ்தத்தைத் தொடர்ந்து செல்லவும்.

1. தாளக் குறிப்பு	|4				O		O	
2. அக்ஷரங்கள்	o	o	o	o	o	o	o	o
3. சொற்கட்டு	தைஹ	த்தை	தைஹ	த்தை	தைஹ	த்தை	தைஹ	த்தை
4. எண்ணிக்கை	1	2	3	4	5	6	7	8

தாளக் குறிப்பு :

பயிற்சி செய்யும் பொழுது 1-வது காலத்தில் 1 பயிற்சியும் 2-வது காலத்தில் 2 பயிற்சியும் 3-வது காலத்தில் 4 பயிற்சியும் செய்ய வேண்டும்.



நாட்டியக் குதிரை

"நடோத்தமன்"

நாடகங்களில் மனித வாழ்க்கையைச் சித்தரிப்பதால் பயனடைகிறோம். ஆனால் மனிதர்களே மனிதர்களாக வேஷந் தரித்துக் கொள்ளுகிறார்கள். இதில் இன்னும் ஒரு புதுமையைக் கூட்டி விறு விறுப்புண்டாக்கப் போலி விலங்குகளையும் கையாள வேண்டுமென்று முடிவுக்கு வந்தார்கள். அதன்மூலம் சபையோருள்ளத்தில் ரஸபுஷ்டி உண்டாவதற்கும் வழி யுண்டாயிற்று. இப்படியாகத் தயாரான அபூர்வ சிருஷ்டி தான் **நாட்டியக் குதிரை.**

முன்பெல்லாம், நாடகம் ஆரம்பிக்கும் முன்பு **சூத்திரதாரி** சபையோர் முன் தோன்றிக் கதையையும், கதா பாத்திரங்களையும் அறிமுகம் செய்து வைப்பது வழக்கம். நாட்டியக் குதிரை கண்டு பிடிக்கப் பட்ட பிறகு, சூத்திர தாரியின் சகாவாக நாட்டியக் குதிரை தோன்றலாயிற்று.

பழைய நாடகங்களில் விதூஷகன் அவ்வப்போது தோன்றி சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாக ஹாஸ்ய வெடிகளைக் கிளப்'புவான்: ஆங்கில நாடகங்களில் (Fool) 'பூல் என்று விதூஷன் அழைக்கப் பட்டான். **பபூன்** என்றும் **கோமாளி** என்றும் இக் காலத்திலும் நாடகத்தில் சில நட்சத்திரங்கள் தோன்றுவது யாவரும் அறிந்ததே.

நம் நாட்டு நாடகங்களிலும், மேனாட்டு நாடகங்களிலும், , கதையுடன்ஒட்டிய ஹாஸ்யமே சிறப்பாக விளங்கி வந்தது. தற்காலத்தில் கதையின் இடையிலே ஹாஸ்யக் கதை யொன்று புகுந்து, நம்மைச் சிரிக்க வைப்பதோடு, பொருத்தமில்லாதஇம்முறை காரணமாகவும் சிரிக்கவைக்கிறது.



மொத்தத்தில் 'நாடகத்திற்கு' ஹாஸ்யம் இன்றியமையாதது, என்பதை மட்டிலும் உணர்ந்து எப்படியோ ஒருவிதமாக அது கையாளப் பட்டு வருகிறது.

இந்த முறையாக விதூஷகன், கோமாளி முதலியவர்கள் தேவைப் பட்டிருப்பது போலவே நாட்டியக் குதிரையும் நாடகங்களில் இடம் பெறலாயிற்று. சமீப காலத்தில் சூத்திர தாரனுடன் முதன் முதலாகத் தோன்றிய விசித்திர விதூஷகன் தன்னைப் பார்த்த உடனேயே சபையோர்கள் சிரிக்க வேண்டு மென்பதற்காகத் தகர டப்பாக்களைக் கொண்டு கண், மூக்கு முதலியவைகளை அமைத்துக் கொண்டான். நகைப்புக் கிடமான அவன் வேஷம், மனிதர்களுடைய படியைத் தாண்டி யிருந்தாலும் சபையோர்களுடைய உள்ளத்தில் நகைச்சுவை கலந்த ஓர் கிளர்ச்சியை உண்டாக்கவே, அதே வேஷம் நாட்டியக் குதிரையாக மாறுவடிவம் பெறலாயிற்று.

நாட்டியக் குதிரை, சூத்திர தாரனுடன் தானும் முதன் முதலாகப் பிரவேசித்துச் சபையோர்களை உருட்டி முழித்துப் பார்க்கும். சூத்திர தாரனுடைய கேள்விகளுக்குப் பதில் கூறும் முறையில் கதா பாத்திரங்களைச் சபையோர்களுக்கு அறிமுகப் படுத்தும். கடைசியாகத் தான் சுமந்து வந்த சூத்திர தாரனைக் கீழே தள்ளி விட்டுக் கம்பீரமாக எழுந்து நின்று கொள்ளும்.

சுமார் 35 வருடங்களுக்கு முன்பு மேனாட்டுச் சித்திரக்காரராகிய **பிகாஸோ** (Picasso) என்பவருக்கு ஒரு யோசனை உதய மாயிற்று. "மனிதர்கள் மட்டும் மிருகங்களைப் போல நடந்து கொள்ளும் போது, மிருகங்களை ஏன் மனிதர்களாக



ஆக்கக் கூடாது? "என்பது தான் அந்த அபூர்வ யோசனை! இந்த நாட்டியக் குதிரையை நாடக மேடைக்குத் தந்து உதவியவர் இவர்தான். இவ்விஷயமாக இவருக்கு உதவி செய்தவர் லிப்பர் மான் (Libberman) என்பவ ராவார். 'பிகாஸோ' தான் தீட்டிய நல்ல சித்திரங்களேயல்லாமல் தன் மனம் போனபடியும் சில, 'காணச் சகியாதன என்று எண்ணும் படியான, சித்திரங்களையும் தீட்டினர். முதலில் சிலர் அவருடைய இச்சித்திரங்களைக் கண்டு மனத்திற்குள் சிரித்தார்கள். ஆனல் நாளாக ஆக அவருடைய கற்பனைகள் ஹாஸ்யத்திற்கு மிகவும் உதவியாக இருப்பதைக் கண்டு வரவேற்கவும் ஆரம்பித்தார்கள். அப்படியாகத் தோன்றிய **நாட்டியக் குதிரை** முறையாக வளர்ச்சி யடைந்து தற்சமயம் '**சந்திரலேகாவில்**' கண்ட அளவாக வளர்ச்சி யடைந்துள்ளது.

நம் நாட்டில், விசேஷமாகத் தென்னாட்டில், **பொய்க் குதிரை** யென்றொரு ஆட்டம் வெகு நாட்களாக இருந்து வருகிறது. கிராமத் தெருக் கூத்தாக இன்னும் இது இருப்பதோடு கிராமத்தவரிடையே சிறந்த பொழுது போக்காகவும் இருக்கின்றது. ●

'பொய்க் குதிரை', 'பொம்மலாட்டம்,' 'கரகம்' இவை பற்றிய விளக்கமான விஷய தானத்திற்கு, 'நாட்டியத்தில்' சிறந்த இடமுண்டு. நேயர்கள் கவனிப்பார்களாக.

உங்களுக்குத் தெரியுமா?
(விடைகள்)

1. சாந்தா. ராமப்ரம்மம்.
2. பாரசீக மொழியைச் சார்ந்தது. மொகலாய சாம்ராஜ்யம் ஏற்பட்ட பின்பு வழக்கத்திற்கு வந்தது.
3. நாட்டை, கௌளை, ஆரபி, ஸ்ரீராகம், வராளி. ஸ்ரீத்யாகராஜ சுவாமிகள். கனபஞ்சகம்.
4. ஆனைஐயா, சுப்புராயசாஸ்திரி.
5. திருவையாறு, ஸ்ரீத்யாகப்பிரம்மத்தை இசையுலகிற்கு வழங்கிய பெருமை வாய்ந்தது.
6. அருணாசலக் கவிராயர்; 1712—1779
7. மஹாராஷ்டிரர்களுடைய பக்திப் பாடல்கள்.
8. குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்.
9. ஒரு தாள வாத்தியம். கோட்டு வாத்தியத்தைப் போன்றது. வடிவத்தில் சற்றுச் சிறியது. பெரும்பாலும் வீணைக்குப் பக்க வாத்தியமாக அமைத்து, இரு இரும்புக் கோல்கள் மூலம் அதில் ஜதியெழுப்புவார்கள்.
10. ஐந்து வகைப் படும். த்ரயஸ்ரம், சதுரஸ்ரம், மிச்ரம், கண்டம், ஸங்கீர்ணம் என அவை வழங்கும். சதுரஸ்ரம் 4. த்ரயஸ்ரம் 3. இரண்டையும் கலந்தால் மிச்ரம் 7. மிச்ரத்தையும், த்யரஸ்ரத்தையும் கூட்டி, அதைப் பாதியாய் வெட்டினல் கண்டம் 5. கண்டத்தையும் சதுரஸ்ரத்தையும் கூட்டினல், ஸங்கீர்ணம் 9.
11. 'பஞ்சமுக வாத்யம்' எனும் பழமையான வாத்தியம்.

ஸ்ரீ முத்து ஸ்வாமி தீக்ஷிதர் க்ருதி

[செம்மங்குடி ஸ்ரீநிவாஸ ஐயர்]

பல்லவி

ஆனந்தா$_3$ ம்ருத கர்ஷிணி

அம்ருத வர்ஷிணி! ஹராதி$_3$ பூஜிதே! சிவே! ப$_4$வாநி! (ஆனந்த)

சரணம்

ஸ்ரீ நந்த$_3$ நாதி$_3$ ஸம் ரக்ஷிணி!

ஸ்ரீ கு$_3$ருகு$_3$ஹ ஜனனி! சித்$_3$ ரூபிணி!

ஸானந்த$_3$ ஹ்ருத$_3$ய நிலயே! ஸத$_3$யே!

ஸத்$_3$ய: ஸுவ்ருஷ்டி ஹேதவே த்வாம்

ஸந்ததம் சிந்தயே அம்ருதேச்வரி!

ஸலிலம் வர்ஷய, வர்ஷய, வர்ஷய (ஆனந்த)

இதன் பொருள் :—

பல்லவி

ஆனந்தா$_3$ம்ருத கர்ஷிணி - ஆனந்தமாகின்ற அமுதத்தை (மக்களுக்கு) அளிக்கும் ஏ தேவியே!

அம்ருத வர்ஷிணி! - (தாபங்களால் துயருறும் மாந்தர்களுக்கு) அமுதமாகும் நீரைப் பொழியச் செய்பவளே!

ஹராதி$_3$ பூஜிதே - சிவன் முதலிய தேவர்களால் பூஜிக்கப்படுபவ்வளே!

சிவே, ப$_4$வாநி - நன்மையை யளிப்பவளும், பூதங்கட்கு உறைவிடமுமான ஈசனது பத்தினியே!

சரணம்

ஸ்ரீ நந்த$_3$னதி ஸம்ரக்ஷிணி - திருமால் முதலிய தேவர்களைக் காப்பவளே!

ஸ்ரீகு$_3$ருகு$_3$ஹ ஜநநி! - ஸ்ரீ முருகப் பெருமானின் தாயே!

சித்$_3$ ரூபிணி! - ஞான ஸ்வரூபியே!

ஸாநந்த$_3$ ஹ்ருத$_3$ய நிலயே! - பேரின்பத்தை அனுபவிக்கும் மகான்களின் மனத்து உறைபவளே!

ஸதயே - கருணைக்கடலே!

ஸத்$_3$ய: ஸுவ்ருஷ்டி ஹேதவே - உடன் மழை பெய்விக்க,

த்வாம் - உன்னை,

ஸந்ததம், சிந்தயே - எப்போதும் (வழிபட்டு) த்யானிக்கின்றேன்.

ஸலிலம், வர்ஷய - மழையைப் பெய்விப்பாயாக (வர்ஷிக்கும்படி செய்வாயாக.)

+ இந்த அடையாளம் தாளத்தில் தட்டு (அடி) விழும் இடங்களைக் குறிக்கும். ஒன்று இரண்டு முதலிய எண்கள், விரல்கள் எண்ணுவதைக் குறிக்கும். ● இந்த அடையாளம் தாளத்தில் வீச்சு விழும் இடங்களைக் குறிக்கும்.

ராகலக்ஷணம் : இந்த ராகம் 66-வது மேளமான சித்ராம்பரியில் (ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்களால் **சதுரங்கிணி** என்று கூறப் பட்டிருக்கும் ராகத்தில்) ஜன்யம். (அந்தர காந்தாரம், ப்ரதி மத்யமம், காகலி நிஷாதம்.)

தாளம் : ஆதி. } அவரோஹணம்: ஸ் நி ப ம க ஸ { 66-வது மேளத்தில் ஜன்யம்.

பல்லவி

+	1	2	3	+	●	+	●
ஸா ;	; கா	; ;	மா ;	பா பா	மா க ம	கா ஸா	ஸா ;
ஆ .	. ன	ந் .	தா .	ம்ரு தா	. க ர்	. ஷி	ணி .
ஸா ;	; நி ஸ	கா ;	க ம பா	நீ பா நி ப	ப ம க ம	கா ஸா	ஸா ;
ஆ .	. ன ந்	. .	தா . .	ம்ரு தா . .	. . க .	ர் ஷி	ணி .
ஸா ;	; நி ஸ	கா ;	க ம ப நி	ஸ் நி ப ப	ா ம க ம	கா ஸா	ஸா ;
ஆ .	. ன ந்	. .	தா . . .	ம்ரு . தா .	. க .	ர் ஷி	ணி .
பா நீ	ஸா நீ	; ஸா	கா ;	ம பா நி	பா ப ம	, ம கா	க ஸா நி
அ ம்ரு	த வ	ர் ஷி	ணி .	ஹ ரா தி	பூ ஜி தே	. சி வே	ப வா னி

(ஆனந்தாம்ருத கர்ஷிணி)

சரணம்

+	1	2	3	+	●	+	●
பா ;	; பா	நீ பா	பா மா	பா ஸ்ா	; ஸ் நி	நீ ஸ்ா	ஸ்ா ;
ஶ்ரீ .	. ந	ந் த	நா .	தி ஸம்	. ர .	. க்ஷி	ணி .
பா ;	; ப நி	ஸ் நி பா	பா ப ம	பா ஸ்ா	; ஸ் நி	நீ ஸ்ா	ஸ்ா ;
ஶ்ரீ .	. ந ந்	. . த	நா . .	தி ஸம்	. ர .	. க்ஷி	ணி .
ஸ்ா க்ா	நீ ஸ்ா	ஸ் நி ஸ்ா	பா ஸ்ா	நீ , ப	பா , ம	க ம கா	ஸா நீ
ஶ்ரீ .	கு ரு	கு . ஹ	ஜ ன	நீ . .	சி . த்	ரூ . .	பி ணி
ஸா நி ப	நி நி நி ஸ	க ஸ கா	க ம பா	பா நீ	ஸ் க்ா ஸ்	ஸ் நி நி ப	ப ம பா
ஸா ன ந்	த ஹ்ரு த ய	நி ல யே	ஸ த யே	ஸ த்ய:	ஸு வ்ரு ஷ்டி	ஹே . . த	வே . த்வாம்
ஸ்ா நி ப	, நீ ப	மா ப ப	கா ஸ க	ஸ நி ஸா	ப ம க ஸ	ஸ் நி ப ப	ம ம க க
ஸ ந்த த	ம் சி ந்த	யே அ ம்ரு	தே ச்வ ரி	ஸ லி லம்	வ ர் ஷ ய	வ ர் ஷ ய	வ ர் ஷ ய
ட { ஸா , க	; ம ப	நி ஸ் நி நி	ப ம ம க	ஸா , நி	ப நி நீ	ஸ நி ஸ க	ம ப ம க
ம் { ஸ கா ம	பா க ம	, ப நீ	ப நி ஸ் க்	ஸ்ா , நி	ப ம மக	ஸா , ஸ்	நி ப ம க

(ஆனந்தாம்ருத கர்ஷிணி)

குறிப்பு:—இந்தக் கீர்த்தனம் ஸ்ரீ முத்து ஸ்வாமி தீக்ஷிதர் அவர்களால் மழை பெய்வதற்காக இயற்றப் பட்டது.

கலைத்துணுக்கு

• கள்ளனும் குள்ளனும் :

ஒரு சமயம் ஒரு கனவான் வீட்டு விவாகத்தில் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரின் ஹரிகதைக்கு ஏற்பாடாகி யிருந்தது. பாகவதருக்கு வட மொழியில் நல்ல பயிற்சியுண்டு. அன்று கதை ருக்மிணிகல்யாணம்.

பாகவதர் கதையை ஆரம்பித்து அழகாக நடத்தி வந்து இடையே ருக்மிணி தேவி கண்ணனுக்கு, அந்தணர் மூலம் காதற் கடிதமெழுதி யனுப்பியதாகக் கூறினர். அதற்கேற்ப பாகவதத்திலிருந்து ருக்மிணி தேவியின் சுலோகங்களான 'சுருத்வா குணன்' முதலியவைகளை நான் கைந்து கூறி, திடீரென்று நிறுத்தினர். இடையில் ஏதோ எதிர் பாராத தவறு நேர்ந்ததை பாகவதர் உணர்ந்து கொண்டார்.

இதை யுணர்ந்த சபையிலுள்ள ஒருவர் பாகவதரை மட்டந் தட்ட எண்ணி, 'பாகவதர்வாள்! ருக்மிணி தேவியின் சுலோகத்தை இன்னுமொரு முறை சொல்ல வேண்டும்' என்று கேட்டு விட்டார்.

புத்தி கூர்மை யுள்ள பாகவதர் கேட்டவரின் குறிப்பை உணர்ந்து 'ஸ்வாமி! இதுவோ காதற் கடிதம் கண்ணனுக்கு, தேவியவர்கள் எழுதியது. அதற்கு முத்திரையும் வைத்தாகி விட்டது. பெரிய இடத்துத் தபாலை இனிப் பிரிக்கலாமா? பிரிப்பதுதான் நியாயமா?' என்று கூறிக் கேட்டவரை உட்கார்த்திவிட்டார்.

அந்த விடாக்கண்டர் 'கடிதத்தைக் கண்ணன் படிக்கும் கட்டம்' வரும்பொழுது ஒரு கை பார்க்கலாமென்று திட்டிக் கொண்டிருந்தார். கட்டம் வந்தது.

"கண்ணன் ஆவலுடன் கடிதத்தை வாங்கினர். மௌனமாகவே படித்து மகிழ்ந்தார். பகவானும் அக்காதற் கடிதத்தைப் பலமாகப் படிக்க விரும்பவில்லை." என்று கூறி அந்த விடாக்கண்டன் முகத்தைப் பார்த்தார். அவர் முகத்தில்.......... 18

• கலைக்கு சம்மானம் :

ஒரு சமயம் முத்தையா பாகவதர் வபனஞ் (க்ஷவரம்) செய்து கொண்டிருந்தார். அப்படியே தூங்கி விட்டார். முதல் நாள் இரவு கண் விழித்த சோர்வு.

நாவிதன் நயமாகத் தன் காரியத்தை முடித்து விட்டான். கண் விழித்ததும் நாவிதன் மௌனமாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்து "என்னப்பா பேசாமலிருக்கிருய்? தூங்கிவிட்டேன், இனி உன் காரியத்தைப் பார்" என்ருர். 'எல்லாம் ஆயிடுத்துங்க' என்று நாவிதன் பதில் கூறவே, முகத்தைத் தடவிய படியே வபனம் முடிந்து விட்டதைக் கண்டு 'என்னப்பா பெரிய கை காரனுயிருக்கிருயே'! என்று சொல்லி உள்ளே சென்று சரிகைச் சால்வை யொன்றையும் பத்து ரூபாயையும் நாவிதனிடம் கொண்டுவந்து கொடுத்தார்.

'இதென்னுங்க!' என்று அவன் ஆச்சரியமடையவே "போடா உன் கலையிலே நீதான் மஹாவித்வான். வித்துவான்களுக்குக் கூலி கொடுப்பதில்லை. சால்வையைத்தான் சம்மானமாக அளிப்பது வழக்கம்" என்று அன்புடன் கூறி அனுப்பி வைத்தாராம். 19

• நயமா வியமா ?

நாகப் பட்டிணத்தில் துரைசாமிப் பிள்ளை யென்ற சிறந்த சங்கித ரசிகர் ஒருவர் இருந்தார். நல்ல குண முள்ளவர். அதோடு காலந் தவருமல் எந்தக்

காரியத்தையும் செய்து முடிப்பதில் மிகுந்த ஆர்வமுள்ளவர்.

ஒரு சமயம் அவருடைய வீட்டில் நடந்த ஒரு விசேஷத்தில் கோனேரி ராஜபுரம் வைத்ய நாதையருடைய கக்சேரிக்கு ஏற்பாடு செய்தார். மாலை 5 முதல் 9 மணி வரை கச்சேரியும், 9 முதல் வேறு நிகழ்ச்சிக்கும் ஏற்பாடாகி யிருந்தது.

குறித்த காலத்தில் கச்சேரி ஆரம்பமாகியது. பாகவதர் விஸ்தார மாகக் காம்போதியை ஆலாபனம் செய்தார். மணி 8 ஆகிவிட்டது. அடுத்தபடியாக அரை மணி தானமும் முடிந்தது. இராகத்தில் பிள்ளையவர்களும் சபையோர்களும் சொக்கிவிட்டார்கள். அன்று பக்க வாத்தியம் வாசித்தவர் திருக்கோடிக் காவல் கிருஷ்ணையர், என்றல் கேட்க வேண்டுமா? ஆனல் மணி ஒன்பது அடித்து விட்டது. பாகவதர் 'ஸ்ரீ சுப்ரமண்யாய' என்ற தீக்ஷிதர் க்ருதியை ஆரம்பித்தார்.

கச்சேரிக்கு உரிய காலம் முடிந்து விட்டதை உணர்ந்த பிள்ளை யவர்கள் உணர்ச்சியடைந்து எழுந்தார். ஒரு தட்டில் பாகவதருக்கு உரிய சம்மானத்தையும் வைத்து அவரிடம் சென்று 'பாகவதர்வாள்! இந்தாருங்கள் சம்பாவனை' என்றுர்,

விவரம் ஒன்றும் புரியாமல் 'ஏன் அதற்குள் சம்பாவனை?' என்று பாகவதர் கேட்கவே, 'ஒன்றுமில்லை - தாங்கள் இன்று பாடிய காம்போதி ராகம் மட்டிலுமே சம்பாவனைக்கு அதிகமானது. மேலும் பாடினல் அதன் சுகம் குறைந்து போய்விடும். சம்மானஞ் செய்யவும் சக்தி யிருக்காது. தயை செய்து இத்துடன் மங்களம் பாடிக் கச்சேரியை முடித்து எப்பொழுதும் காம்போதியே எங்கள் எல்லோருடைய காதிலும் ஒலித்துக் கொண்டிருக்கும்படி செய்து தரவேண்டும்' என்று கூறித் தன் எண்ணத்தைக் கண்ணியமாக முடித்துக் கொண்டுவிட்டார், **20**

• 'சாமூதிரி தவிடு தின்னு'

கள்ளிக் கோட்டையில் சாமூதிரி ஒருவர் இருந்தார். சிறந்த சங்கீத ரசிகர். வித்வான்கள் யார் போனலும் அவர்களுடைய பாட்டைக் கேட்டுத் தகுந்தபடி சம்மானம் செய்வார். ஆனல் அவரிடம் ஒரு வழக்கமுண்டு. பாடும் முன்பாகவே அவரிடம் ஸாகித்யத்தைச் சொல்ல வேண்டும்.

ஒரு நாள் பெரிய வித்வான் ஒருவர் வந்தார். வந்தவரும் பிடிவாதக்காரர். ஸாமூதிரி ஸாகித்யத்தைக் கேட்டது அவருக்குப் பிடிக்க வில்லை. மறுத்து விட்டார். ஸாமூதிரிக்குப் பாட்டிலோ சபலம். இதைக் கண்ட ஸாமூதிரியின் காரியதரிசி, 'யஜமானே! ஸம்மானம் செய்யும் போது இதற்குப் பரிகாரம் செய்து விடலாம். பாடிவிட்டுப் போகட்டும்' என்று மத்தியஸ்தம் செய்து வைத்தார். ஸாமூதிரி 'சரி' என்று சம்மதித்தார்.

கச்சேரி ஆரம்பமாகி, அபாரமாக அமைந்தது. ஸாமூதிரி தன்னை மறந்து ரசித்தார். தானம் - பல்லவி சிகர மாக விளங்கியது. மகிழ்ந்த ஸாமூதிரி நல்ல சம்மானமுந் தந்து வழி யனுப்பும் போது "இப்பொழுதாவது சொல்லுங்களேன் பல்லவியின் ஸாகித்யம் என்ன?" என்றுர்.

"கூறினல் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே" என்று பாகவதர் கூறியதும் இன்னும் சற்று ஆர்வத்துடன் "இல்லை இல்லை" என்றுர் சாமூதிரி.

ஓடுவதற்கு ஏற்பாடு செய்த படியே, "சாமூதிரி தவிடு தின்னு" என்பது தான் பல்லவி என்று கூறியபடி ஓட்டம் பிடித்தார் பாகவதர். (ஸங்கீதத்தில் ஸாரத்தை விட்டுச்சக்கையில் ஆசை கொண்டார் ஸாமூதிரி, என்பது ஸாகித்யத்தின் கருத்து) **21**

• நிரவலா நிரப்பலா?

சூலமங்கலம் என்ற கிராமம் பசுபதி கோவில் ஸ்டேஷனுக்கு வெகு சமீபத்தில் உள்ளது. அங்கு ஸ்டேஷனுக்கும் கிராமத்திற்கும் நடுவில் ஒரு பெரிய மணல் மேடு இருப்பது அநேகமாய் எல்லோருக்கும் தெரிந்திருக்கலாம். அங்கு ப்ரம்ம ஸ்ரீ வைத்யநாத பாகவதரால் நடத்தப்பட்டு வந்த ராதா கல்யாண மகோத்ஸவத்தில், ஒரு சமயம் மைசூர் வித்வான் ஒருவர் பாடினர். அவருக்கு கம்பீரமான சாரீரம். மூன்று மணி நேரம் கச்சேரி செய்தும் சுமார் 4, 5 கீர்த்தனைகள் தான் பாடினர். ஒவ்வொரு கீர்த்தனையையும் அஸாத்யமான நிரவல்களுடன் அவர் பாடியதால் அன்று நிரவல் கச்சேரியாகவே முடிந்தது. அதைப்பற்றிப் பிறகு பேசிக் கொண்டிருக்கையில் பாகவதர், "இந்தக் கிராமத்தில் பெரிய மணல் மேடு இருப்பதால் இவ்வளவு நிரவல்களையும் தாங்க முடிந்ததே யன்றி வேறு ஊராயிருந்தால் இவ்வளவு நிரவல்களையும் தாங்காமல் ஊரே பாழாய்ப் போயிருக்கும்" என்று ஹாஸ்யமாய்த் தெரிவித்தார். **22** ●

தஞ்சாவூர்

(கோட்டு வாத்யம் -

1851-ம் வருஷத்தில் ஓர் எளிய குடும்பத்தில் இவர் பிறந்தார். பாலியத்திலேயே இவருக்கிருந்த வசீகரமான தோற்றம், இனிமையான சாரீரம் கூர்மையான புத்தி, கலைகளில் உள்ள ஆர்வம் இவைகளைக் கவனித்த தஞ்சை ஸமஸ்தான மந்திரியாகிய **பெரியண்ணு** என்பவர் இவரை முன்னுக்குக் கொண்டுவரும் பணியில் ஈடுபட்டார்.

ஒவ்வொரு பாஷா பண்டிதர்களைக் கொண்டும் ஒவ்வொரு சாஸ்திர ஸம்பன்னர்களைக் கொண்டும், ஒவ்வொரு கலையில் ப்ரவீணர்களைக் கொண்டும் **தஞ்சாவூர் கிருஷ்ண** பாகவதருக்கு ஸாராம்சத்தைச் சொல்லிக் கொடுக்கும்படி செய்தார். மகராஷ்ட்ரக் கதைகளில் உள்ள கவர்ச்சியான பாகங்களாகிய, கதையமைப்பையும் வர்ண மெட்டுக்களின் அமைப்புக்களையும், தென்னாட்டு ஸம்ப்ரதாயங்களில் உள்ள ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு, தமிழ், கன்னடம் ஆகிய பாஷைகளில் உள்ள ஸாகித்யங்களையும் ஒருங்கே சேர்த்து, நூதன மார்க்கத்தில் கதைகளைச் செய்யும்படி தயாரித்தார். அதுவரை ப்ராசீன பத்ததிப் படி, பக்தி ரஸமாய்க் கதை செய்து வந்த பாகவதர்கள், கதையின் பூர்வாங்க நிருபணமாகிய முன் பாகத்தை வளர்த்தி ஜனங்களுக்கு அலுப்புத் தட்டும் விதத்தில் செய்து வந்ததையும், அதை நிவர்த்தி செய்து கேட்போர்களிடம் சுறுசுறுப்பையும், ஊக்கத்தையும் உண்டாக்க அவர்கள் அனுவசியமான நாமாவளிகளையும், பஜனைகளையும் புகுத்தி உதவியாய் அமைந்திருக்கும் மிருதங்கம், கடம், கஞ்சிரா. மோர்ஸிங், சிப்ளா ஜாலர்கள் ஆகிய வாத்யங்களையும், மற்ற பாடகர்களையும் ஏககாலத்தில் கோஷிக்கச் செய்து வந்ததையும், ரஸமில்லாத உப கதைகளையும், ஹாஸ்யத்தையும் கதைகளில் அனுவசியமாய்ப் புகுத்தி வந்ததையும், கிருஷ்ண பாகவதரவர்கள் கவனித்தார். ஆகவே, தென்னாட்டுக் காலக்ஷேபங்களில் அநேக சீர்திருத்தங்கள் அவசியம் என்பதை ஊகித்து, அவைகளைச் செய்து காலக்ஷேபத்துறையில் ஒரு புரட்சியை உண்டாக்கினார். வடதேச ஸம்பிரதாயப்படி இரண்டே பின்பாட்டுக் காரர்களை யமைத்துக் கொண்டு தனக்கும் பின்பாட்டுக் காரர்களுக்கும் நடுவில் ஒரு பெஞ்சியைப் போடச்செய்து அதில் மிருதங்கம் வாசிப்போரை வலது புறத்தில் உட்காரச் செய்தார். சில ஸமயங்களில் பிடில் மட்டும் சேர்த்துக் கொள்வதுண்டு. அவருடைய ஸங்கீதம் சுருதி சுத்தமாயும், ஸ்வர சுத்தமாயும், ரஸங்களுக் கேற்ற வர்ண மெட்டுக்களுடனும், பாவங்களைப் போஷிக்கும்படியான கால ப்ரமாணங்களுடனும், ராக பாவங்கள் ஜீவகளையுடனும், தாளங்கள் லயக் கணிசத்துடனும், ஆவர்த்த சுத்தங்களுடனும் விளங்கின. பேச்சுடன் பாட்டும், பாட்டுடன் பேச்சுமாக அவருடைய ப்ரவசனங்கள் ஸம்பாணை ரூபங்களிலும் பிரகாசித்தன. தியாகராஜ ஸ்வாமிகளின் கிர்த்தனைகளை ப்ராசீன பாடாந்திரங்களுக் கிணங்க ஸங்கதிகளைச் சீர்திருத்தி நன்கமைத்து ஸமய ஸந்தர்ப்பங்களுக் கேற்றவாறு பாடினார். வடதேசத்து வர்ணமெட்டுக்களுக் கிணங்க **ஸாகி, ஓவி, தண்டி, அபங்கம்** முதலிய எல்லா உருப்படிகளையும் போஷித்துப் பாடினார். இந்துஸ்தானி ராகங்களாகிய **பேஹாக், கானடா, காப்பி, தேசிய-தோடி, மால் கோஸ், மாண்ட், ஹம்ஸானந்தி, சுப பந்துவராளி** போன்ற ராகங்களைக் கர்நாடகக் கலப்பின்றியும், கர்நாடக ராகங்களை ஜீவகளை ததும்பக் கச்சிதமாகவும் பாடினார். ஆகவே கதைகளில் இவருடைய மெருகு வாய்ந்த ஸங்கீதத்தைக் கேட்ட **மகா வைத்ய நாதையர், பட்டணம் சுப்ரமண்ய ஐயர், சரப சாஸ்திரிகள்** போன்ற மேதாவிகளான ஸங்கீத வித்வான்களும் வடதேசத்து **பாவாக்களும்** ப்ரமையை அடைந்ததுடன் எவ்விதச் சீர்திருத்தங்களும் அவசிய மில்லாத நிலைமையில் ஸங்கீதம் அமைந் திருப்பதைக் கண்டு புகழுவார்கள்.

தெலுங்கில் **கீர்த்தனைகள், பதங்கள், பத்யங்கள், த்விபதங்கள், ஜாவளிகள்** ஆகிய உருப்படிகளைக் கேட்கும் ஆந்திர தேசத்தவர்கள் இவரைப் பிறவி ஆந்திர ராகவே எண்ணுவார்கள். வேத சாஸ்திர ஸம்பன்னர்களான **மகாமஹோபாத்யாய ராஜு சாஸ்திரிகள், ராமஸுப்பா சாஸ்திரிகள்** போன்றவர்களும் **காப்பனுமங்கலம் சாமி சாஸ்திரிகள், பரித்தியூர் கிருஷ்ண சாஸ்திரிகள்** போன்ற பௌராணிகர்களும், பாகவதரவர்களால் ஸமயோசிதம் போல் சொல்லப் படும் **சுலோகங்கள், கீர்த்தனைகள், சூர்ணிகை, அஷ்டபதி, தரங்கம்** ஆகியவைகளின் அழகையும், சொற் சுவை பொருட் சுவையுடன் அவர் ப்ரவசனம் செய்யும் அழகையும் கண்டு பரம ஸந்தோஷமடைவார்கள்.

கிருஷ்ண பாகவதர்

துரையப்ப பாகவதர்)

அவருடைய ப்ரவசனங்களில் அஸப்யமான பேச்சோ, அநாகரிகமான சொற்களோ, அமங்கலமான வசனங்களோ கேட்க முடியாது. கம்பீரமும், நயங்களும், சுருதி லீனமும் வாய்ந்த அவருடைய சாரீர வசதியால் ஸங்கீதம் எப்படிப் பிரகாசித்ததோ அது போலவே அவருடைய ப்ரவசனங்கள், கன நயங்களுடன் கதா பாத்திரங்களுக் கேற்பப் பூர்ண பாவங்களுடன் விளங்கின.

ரஸ பூர்த்தியாய் ப்ரத்யக்ஷமாய் நடப்பது போல், ஒவ்வொரு கதையும், தர்மங்களும் நடித்துக் காட்டப் பட்டதால், அந்தக் காலத்தில் நடிப்புக் கலையில் இணையற்றவர்களாய் விளங்கிய நடிகர்கள் இவர் கதையில் மயங்கினார்கள். வேஷம், திரை இவைகளின்றி அவ்வளவு பாத்திரங்களாகவும் இவர் தன்மயப் பட்டு நடிக்கும் வன்மையைக் கண்டு, "நாம் எல்லாம் இவருக்கு எம்மாத்திரம்" என்று எண்ணிக் குன்றிப் போவார்கள். பரத நாட்டியக் கலையில் கீர்த்தியுடன் விளங்கிய பெண்மணிகள் பாகவதரவர்களின் காலில் அடவுச் சொற்கள் அனைத்தும் இணையற்ற அழகுடனும் விவரத்துடனும் பேசுவதையும், அவருடைய அபிநயங்கள் மிகுந்த உன்னதமான முறையில் விளங்குவதையும் கண்டு நாணினார்கள். சில சமயங்களில் தெருக்கூத்து, பொம்மலாட்டம், திரௌபதி யம்மன் கதை, லாவணிகள், ஊமையன் சண்டை போன்ற நாட்டுப் பாடல்களைப் பாடி அவர் வர்ணிக்க ஆரம்பித்து விட்டால், பாமர ஜனங்கள், தாங்கள் அவைகளை நேரில் காண்பதாகவே எண்ணிக் குதூகலிப்பார்கள். இப்படியாக ராஜாக்கள், பண்டிதர்கள், கலைஞர்கள், பாமர ஜனங்கள் ஆகிய எல்லோரும் இவரிடம் மட்டற்ற மதிப்பை வைத்திருந்தபடியால் இந்தக் காலக்ஷேபக் கலையில் அவர் ஓர் அவதார புருஷராகவே விளங்கினார்.

வெகு சீக்கிரத்தில், இவருடைய கியாதி இம்மாகாணம் பூராவும் பரவிற்று. சென்னை முதலிய ப்ரதான நகரங்களிலும், செட்டி நாடுகளிலும், மற்ற எல்லா ஊர்களிலும் ஏராளமான கதைகள் நடந்தன. விவாஹம் போன்ற எல்லாக் கல்யாண ப்ரமேயங்களிலும் இவருடைய கதைகளை வைத்து ரஸித்துக் கௌரவித்தார்கள். மைசூர், ராமநாதபுரம், புதுக்கோட்டை போன்ற ஸமஸ்தானங்களில் இவர் பெரிதும் ஸம்மானிக்கப் பட்டார். தஞ்சாவூர் நாராயணஸாமி அப்பா என்ற மிருதங்க வித்வான் ஆதியிலிருந்து இவருடைய கதைகளில் வாசித்து ஸந்தோஷித்தார். மிருதங்கம் துக்காராம், ராமதாஸ் ஸ்வாமி, ஸேதுராம ராவ், கடவாத்யம் கிருஷ்ணையர் போன்ற வித்வான்களும் இவர் கதைகளுக்கு வாசித்திருக்கிறார்கள். மைலாட்டூர் மிருதங்கம் கிருஷ்ணையர். இவர் 'ஸெட்டு'டன் 5, 6 வருஷங்கள் இருந்தார். ஆதியில் கோவிந்த பாகவதர் என்பவர் சில காலம் இவரிடம் பாடிக்கொண்டிருந்தார். அவருக்குத் தானும் கதை செய்ய வேண்டும், என்ற அவா உண்டானபடியால், 1885-ல் விலகிவிட்டார். அது முதல் எனது தகப்பனாராகிய தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதரும், மருதப்பா என்பவரும் கடைசி வரையில் பாடி வந்தார்கள்.

1895-ல் சென்னையில் பக்தி மார்க்க ப்ரஸங்க ஸபாவும், அதை யடுத்து இன்னும் அநேக ஸபாக்களும் ஏற்பட்டன. இதனால் கிருஷ்ண பாகவதர் மட்டும் போதாமல் மற்ற பாகவதர்களுக்கும் மாதாந்திரக் கதைகள் கிடைத்தன. ப்ராசீன பத்ததிப்படி பக்தி ரஸமாய்க் கதை செய்து வந்த அண்டமின் சிவராம கிருஷ்ண பாகவதர், தில்லை ஸ்தானம் நரஸிம்ம பாகவதர், மணமேல்குடி வெங்கடாசல பாகவதர், நெம்மேலி வைத்யநாத பாகவதர் முதலானவர்களும் சென்னைக்குப் போய்வந்து கொண்டிருந்தார்கள். கால க்ஷேபங்கள் மிகுந்தன. பொது ஜனங்களின் ஆதரவும் உண்டாகிக் கதை செய்கிறவர்களுக்கு, ப்ரதிப் பிரயோசனம் கிடைக்க ஆரம்பித்தது. பழைய உஞ்சவிருத்தி நிலைமை போய், பாகவதர்களுக்கு உயர்நிலை ஏற்பட்டது. அப்போது சென்னை ஸபைகளில் கால க்ஷேபங்களுக்குத் தான் நல்ல செலாவணியிருந்தது. ஜனங்களுடைய க்ஷேமாபி விருத்தியுடன் பாகவதர்களுடைய அபிவிருத்தியும் உண்டாயிற்று. கிருஷ்ண பாகவதருடைய கதைகளைக் கேட்டு, தாங்களும் செய்யவேண்டும், என்ற ஆர்வத்துடன் பண்டிட் லக்ஷ்மணாசார், சூலமங்கலம் வைத்ய நாத பாகவதர், திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள், மாங்குடி சிதம்பர பாகவதர் ஆகிய இளைஞர்கள் கதை செய்ய முன்வந்தார்கள். ஆரம்பத்தில் இவர்கள் எல்லோரும் கிருஷ்ண பாகவதரவர்களின் புதுப் பத்ததி யாகிய நிரூபணக் கோர்வைகளையே அநுசரித்தார்கள். ஆனால் கிருஷ்ண பாகவதர் முதலில் பாடி, தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதரும், மருதப்பாவும் பின்னால் முறையாகச் சேர்ந்துபாடி, மைலாட்டூர் கிருஷ்ணையர் மிருதங்கத்துடன் ஸங்கீதத்திற்கு உண்டான கௌரவம் மற்றவர்களால் உண்டாகவில்லை. ப்ரவசனங்களிலும் அவரைப்போல் தன்மயப் பட்டு நடித்துப் பேசவும் முடியவில்லை, மூல கிரந்தங்களின் அபிப்ராயம், கவிகளின் ஹ்ருதயம் இவைகளைப்பற்றின நிச்சய ஞானம், ஸாஹித்ய விஷயங்களில் மற்றவர்களுக்கு இல்லாததால், தங்கள் படிப்புக்குத் தகுந்தவாறு அபிப்ராயம் சொல்லி வந்தார்கள். ஆனதால் அவ்வளவு சோபிக்கவில்லை. இருந்தாலும் சிலரிடம் ஒவ்வொரு ஜீவகளை விளங்கி வந்தபடியால் அவர்கள் கிருஷ்ண பாகவதருக்குப் பிற்காலத்தில் அதாவது 1903-வது வருஷத்திற்குப் பிறகுதான் பிரஸித்திக்கு வந்தார்கள்.

புதையல் 4

நாட்டிய சாஸ்திரம்

வாசுதேவ சாஸ்திரி

(ஆராய்ச்சியாளர், சரஸ்வதி மஹால், தஞ்சை.)

நாட்டிய நூல்களுள் மிகவும் விரிவானது பரதருடைய நாட்டிய சாஸ்திரம். அந்த நூல் ஏற்பட்ட காலம் அதில் குறிப்பிடப் படவில்லை. இப்போது நமக்குக் கிடைக்கும் நூல்கள் யாவும் பரதரைத் தங்களுக்கு ஆதாரமாகக் கொள்ளுவதால் அந்த நூல் மிகப் பழையது என்பது வெளிப்படை. இந்த நூலைச் சொல்லுபவர் பரதமகரிஷி. கேட்பவர்கள் ரிஷிகளுக்குள் மிக சிரேஷ்டர்களான 45 ரிஷிகள். அவர்கள் பெயரைக் கேட்டாலே நாட்டிய சாஸ்திரத்தின் கௌரவம் நமக்குப் புலப்படும். அத்திரி மகரிஷியின் புதல்வர் முதல்வராவர். அவருடைய பெயரைச் சொல்லக் கூட நூல் அஞ்சுகிறது. பிறகு வஸிஷ்டர், புலஸ்தியர், புலஹர், க்ரது, அங்கிரஸ், கௌதமர், அகஸ்தியர் முதலியவர்கள். முன் கோபத்திற்குப் பேர்போன துர்வாஸரும், ஸதா சண்டையில் பிரியமுள்ள பரசுராமரும், ஸ்ரீமத் ராமாயணம் இயற்றிய வால்மீகி முனிவரும், நாட்டிய சாஸ்திரத்தை சிரவணம் செய்த மகரிஷி மண்டலத்தில் சேர்ந்திருக்கிறார்கள் (அத் 36-ஐப் பார்க்க).

பொருளடக்கம்.

இந்த நூலில் முதல் அத்தியாயத்தில் நாட்டியத்தின் உற்பத்தியும், இரண்டாவது அத்யாயத்தில் நாட்டிய அரங்கம் அமைக்கும் முறையும், மூன்றாவது அத்தியாயத்தில் நாட்டியம் ஆரம்பிக்கு முன் செய்ய வேண்டிய தேவர்கள் வழிபாடும், கூறப் பட்டுள்ளது. நான்காவது, ஐந்தாவது அத்தியாயங்களில் நாடகம் ஆரம்பிக்கு முன்னும், நாடகத்தின் இடை கடையிலும் நடக்க வேண்டிய சங்கீதம், நர்த்தனம், அபிநயம் இவற்றின் முறை கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் முதல் 5 அத்தியாயங்களை நாட்டிய சாஸ்திரத்தின் முகவுரை என்னலாம்.

இதன் பிறகு, நாட்டியத்தின் ஜீவாதாரமான நவரஸங்களும், உள்ளக் கிளர்ச்சிகளும் 6-வது 7-வது அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு மேல் நாட்டியம் என்ற சொல்லின் முதற் பொருளாகிய அபிநயத்தின் விரிவான விளக்கம் ஆரம்பிக்கப் படுகிறது. தற்காலத்தில் பரத நாட்டியம் என்னும் சொற்றொடரை அபிநயம் என்ற பொருளிலேயே உபயோகிக்கிறோம். சொற்களின் பாவங்களும், ராகமும், தாளமும் இவ்வபிநயத்திற்குத் துணையான அங்கங்களாகின்றன. இந்தக் காரணத்தைக் கொண்டே 'பரதம்' என்ற சொல்லுக்கு, 'பாவ, ராக, தாளம்' என்ற சொற்களின் தொகுதி, என்று பொருள் கூறும் வழக்கம் நமது சம்பிரதாயத்தில் இருந்து வருவதோடு, அநேக நூல்களிலும் காணப் படுகிறது.

அபிநயத்தின் பொது விதிகள்

நாட்டிய சாஸ்திரத்தில் உள்ள 36 அத்தியாயங்களுள் 12 அத்தியாயங்கள் இந்த அபிநயத்தின் விளக்கத்திலேயே ஈடு பட்டிருக்கின்றன. இந்த அத்தியாயங்களில் அடங்கி யுள்ள பொருளை விவரிக்கு முன் அபிநயத்தைப் பற்றி பரத முனிவர் கூறும் சில பொது விதிகளை இங்கே கூறுவோம்:—

1. முதலாவதாக, அபிநயம் என்பது உலகத்தின் நடை உடை பாவனைகளை அனுசரித்துச் சற்றே அழகு பெற அமைத்துக் காட்டுவதாகும். உலகத்திலுள்ள பலவகை சுபாவங்களே அபிநயம் செய்யப்பட வேண்டிய பொருள். அந்த சுபாவங்கள் அனைவற்றையும் உலகத்திலிருந்து அறிந்து கொள்ள வேண்டுமே யல்லாது சாஸ்திரத்தினால் கண்டறிய முடியாது. சாஸ்திரத்தில் அடக்கிக் கூறவும் இயலாது. ஆகவே, அபிநயம் செய்ய வேண்டிய எல்லா மனோ பாவங்களையும், சொற் பொருள்களையும் பெரும்பாலும் உலகத்தைப் பிரமாணமாகக் கொண்டு நமது யுக்தியை உபயோகித்து அபிநயம் செய்ய வேண்டுமே யல்லாது எவ்லாவற்றிற்கும் பரத சாஸ்திரத்திலிருந்தே பிரமாணத்தைத் தேட முடியாது. சாஸ்திரமானது அபிநயத்தின் ஒரு கோடியை மட்டும் காட்டுமே யல்லாது, முற்றிலும் தன்னிடம் அடக்கிக் கூற முடியாது. இதைப் பரத முனிவர் அபிநயத்தைப் பற்றிப் பேசும் ஒவ்வொரு அத்தியாயத்திலும் வற்புறுத்திக் கூறியுள்ளார்: அத்தியாயம் 8, சுலோகம் 36-ல், சிரஸை அசைக்கும் விதங்களைப் பற்றிப் பேசும்போதும்; அத். 8, சு. 100-ல் பார்வைகளை விவரிக்கும்போதும்; அத். 8, சு. 170-ல் கழுத்தின் அசைவுகளைச் சொல்லும்போதும்; அத். 9, சு.151 முதல் 155வரையில், கை. முத்திரைகளைப் பற்றி விளக்கும்போதும்; அத். 18, சு. 49-ல்

பாஷைகளை விவரிக்கும்போதும்; அத் 19, சு.1ல் பேச்சுக் குரலை நிர்ணயிக்கும்போதும்; அத் 26, சு. 113 முதல் 119 வரையில் பலவித அபிநயத்தைப் பற்றிப் பேசும்போதும் இந்த முக்கியமான விதியை வற்புறுத்தி யிருக்கிறார். ஆகையால் நாட்டியத்தில் ஈடுபடும் ஆசிரியரும் சீடர்களும் கல்பனா சக்தியில் சிறந்தவர்களாக இருத்தல் வேண்டும். இப்படிக் கல்பனை செய்வதில், உணர்த்த வேண்டிய பொருளின் உருவம், செய்கை, அடையாளம், ஜாதி, இவைகளில் ஏதாவது ஒன்றை உபயோகிக்கலாம் (அத் 9, சு. 152).

2. இரண்டாவதாக நடை, உடை, பாவனைகளைப் பற்றிய பொது விதி ஒன்றைப் பரதர் சொல்லி யிருக்கிறார். வயதுக்குத் தகுந்த உடையும், வேஷத்திற்குத் தகுந்த நடையும், நடைக்குத் தகுந்த பேச்சும், பேச்சுக்குத் தகுந்த அபிநயமும் வேண்டும் என்கிறார் (அத் 14, சு. 68).

3, மூன்றாவதாக, அபிநயத்திற்கு, 'முகராகம்' என்னும் முகத்தின் நிறவேறுபாடு மிகவும் முக்கியமானது. மனோ பாவத்தைக் கண்களைக் கொண்டு அறிவதுபோல் முகத்தின் நிற வேறுபாட்டைக் கொண்டும் அறியலாம். ஆகையால் நவரஸங்களையும் வெளிப் படுத்துவதற்கான முக வர்ண மாறுதலை அபிநயத்தின் ஒரு அங்கமாக அனுஷ்டித்தல் வேண்டும். முகராகம் நான்கு வகை; (1) சுபாவம் (2) ப்ரஸந்நம் அல்லது மலர்ந்தது, (3) சிவந்தது (4) கறுத்தது. இவைகளில் சுபாவ முகராகம் சாதாரண ஸ்திதியிலும், ப்ரஸந்ந முகராகம் ஆச்சரியம், ஹாஸ்யம், ச்ருங்காரம் இவைகளிலும், சிவந்த முகராகம், வீர ரஸம், ரௌத்ரரஸம், கர்வம் இவைகளிலும், கறுத்த முகராகம், கருணாரஸம், பயம், அருவருப்பு இவைகளிலும் அமைதல்வேண்டும் (அத் 8-சு. 155-163). இவைகளுக்கான யுக்திகளைக் கையாளுவது தற்காலம் பழக்கத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. இதைப் பரதமுனிவர் மிகவும முக்கியமானதாகச் சொல்லி யிருக்கிறபடியால் நாட்டியத்தில் ஈடுபட்டவர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

4 அபிநயம் செய்யும்போது கைகளை மேலுங் கீழும், பக்கத்திலும் கொண்டுபோக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்போது கைகளை அநுசரித்துக் கண்களும், புருவமும், முகராகமும் அமைதல் வேண்டும். (அத் 9-சு. 161, 204, 205)

5. பேசும்போது கைகளின் நிலையும், வீச்சும், முத்திரைகளும், பாத்திரங்களுக்குத் தகுந்தபடி இருக்கவேண்டும். உத்தம பாத்திரங்களுக்குக் கை நெற்றி வரையில் உயரலாம், மத்யம பாத்திரங்களுக்கு மார்பு மட்டும் தூக்கலாம், அதம பாத்திரங்களுங்குக் கை தணிந்தே இருத்தல் வேண்டும், மேலும் உத்தம பாத்திரங்கள் பேசும்போது கையின் ஆட்டம் மிகவும் குறைந்திருக்க வேண்டும், மத்யம பாத்திரங்களிடம் கை ஆட்டம் கொஞ்சம் அதிகரிக்கலாம். அதம பாத்திரங்களிடம் பலவகையாகக் கைகளின் ஆட்டம் இஷ்டப்படி இருக்கலாம். தவிர, ஒரே பொருளை உணர்த்துவதற்கு உத்தம பாத்திரமும் மத்யம பாத்திரமும்ஜாடையாக ஒரு முத்திரையினாலும், அதம பாத்திரம் உலகத்தில் அந்தப் பொருளை உணர்த்துவதற்கு உபயோகிக்கும் சைகை முழுமையும் உபயோகித்தும் அபிநயித்தல் வேண்டும். (அத் 9-சு, 163 முதல் 165 வரையில்).

6. கால்களின் கதி முதலிய அசைவுகளும், கைகளின் அசைவுகளும் சேர்ந்து நடக்கும்போது, கால்களை அனுசரித்துக் கை செல்லுதல் வேண்டும்; கையை அனுசரித்து இடுப்பு வளைந்து கொடுக்க வேண்டும். ஆகையால் பாதத்தின் கதியை அநுசரித்தே மற்ற அங்கங்களின் அசைவுகளும் அமைதல் வேண்டும். (அத் 13-சு 46.)

7. பாதங்களின் கதி ஓயும்போது பூமியில் ஸ்திரமாக நிற்பதுபோல், கைகளின் கதிகள் ஓய்ந்தவுடன் இடுப்பில் ஸ்திரமாக வைக்கப் படல் வேண்டும். (அத். 13-சு, 47)

8, ஸ்திரீகளின் நர்த்தன அபிநயங்களில் அதிக வேக முள்ளதோ, அதிகக் கடுமையான தோற்ற முடையதோ உள்ள நிலைகளும், கால், கை, உடம்புகளின் அசைவுகளோ கூடாது (அத். 13-சு. 192, 193).

இதுவரையில் அபிநயத்தைப் பற்றிய பொது விதிகள் கூறப்பட்டன. இனி அபிநயத்தைப் பற்றிய ஒவ்வொரு அத்யாயத்திலும் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் விவரிக்கப்படும். ●

(தொடரும்)

பாஷ்யம் சங்கீத கலாசாலை

மாணவிகளுக்கு வாய்ப் பாட்டு, வீணை பிடில், பரத நாட்டியம், முதலியவைகளில் சாஸ்திரோக்தமான கர்நாடக சங்கீதப் பயிற்சி யளித்து வருகிறது.

இத்துடன் கவர்ன்மெண்ட் பரீக்ஷைகளுக்கும், பள்ளிக்கூடங்களில் சங்கீத ஆசிரியர்களாகச் செல்ல விரும்புவோருக்கும் பயிற்சி யளித்து அனுப்பப் படும்.

கலாசாலையில் வீணை, பிடில், முதலிய இசைக் கருவிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

நேரம் : காலை 7 முதல் 9 மணிவரை

C. B. SRINIVASAN,
Principal.

48. ஸெண்டு ஜேவியர் தெரு, ஜி. டி. மதராஸ்.

20-3-49

கண்ணனும் கலையும்

'சுவை அரசன்'

கண்ணனுக்கும் கலைக்கும் உள்ள தொடர்பைக் காட்ட முயல்வது, ஒரு விதத்தில் விளக்கை ஏற்றிச் சூரியனைக் காண்பிப்பது போலவே யாகும். ஏனெனில் கண்ணனுடன்- கடவுளுடன்- கலக்க முயற்சி செய்யும் பொழுது, அதன் பயனாய்த் தோன்றியவைகளையே, கலைகள் என அழைக்கிறோம். **சுவை**யை உணர வழி செய்து தருவதே கலையாகும். சுவை யுணர்வின் தரம் உயர உயர இறைவனுக்கும் நமக்கும் நடுவில் உள்ள இடைவெளி மெள்ள மெள்ளக் குறைகிறது. கடைசியாகச் சுவையுடன் இரண்டறக் கலந்து **இன்ப** மாகவே ஆகிவிடுகிறோம்; கண்ணனாக இருப்பதைக் கண்டு கொள்கிறோம்.

'ரஸோ வை ஸ:' (அவனே சுவை-சுவையே அவன்) என வேதங்கள் முழக்குகின்றன. பதினெட்டுப் புராணங்களையும் இயற்றிய பின்னரும் வியாசருக்கு மன நிம்மதி ஏற்பட வில்லையாம். பின்பு நாரதர் சொல்லியபடி கலைச் சோலையிலே புகுந்து-கண்ணனைப்பேசி - இன்ப மடைந்தாராம். தான் இன்பம் அடைந்ததோடு நில்லாமல், கலை யுணர்ச்சி கொண்டவர்கள் எல்லோரையும் கூவி அழைத்து, 'சுவைக் கடலான பாகவதத்தை விடாமல் பருகுங்கள்' என்று சொல்லித் தருகிறார் அவர்.

'உயர்ந்த சுவையை ருசிக்க உங்களுக்கு விருப்பமா? கலையை அநுபவிக்க உள்ளத்திலே துடிப்பு இருக்கிறதா?...அப்படியானால் இதோ கேளுங்கள்' என்று **ஹரி ரஸம்**' நிரம்பிய 'கீத கோவிந்த' காவியத்தைப் பாடிக் காட்டுகிறார் பரம பாகவதரான ஜயதேவ கவி.

இப்படிக் கலை பயின்ற உள்ளத்திலே கரும்பாக இனிக்கும் கண்ணனையேதான் நம் பாரதியாரும் 'போத முற்ற போதினிலே பொங்கி வரும் **தீஞ்சுவையே**' என்று பரவசமாகப் போற்றுகிறார். ஒரு முறை, இரு முறை யல்ல; 'நல்லசுவை' ஊறு சுவை, சூறையமுது, அள்ளுசுவை' என்று இப்படி ஓயாமல், நாக்கொட்டுகிறார் நம் நாட்டுக் கவி.

கண்ணனைப் 'பான' மாக்கி,-'ஆசை மது' வாக்கி- பானத்தைச் சுமக்கத் தானே 'பாண்டமாகவும்' ஆகி விடுவதிலே அவ

ருக்கு ஒரு அலாதியான ஆசை. 'அம்மை, உயிரெனும் முலையினில் உணர் வெனும் பால், உண்ண உண்ணத் தெவிட்டா தாம்' அவருக்கு.

இப்படி உயிர்கள் தோறும் உணர்வாக நின்று, தெவிட்டாது தித்திக்கும் தேனும் கண்ணனைச் சுவையாக அனுபவித்தவர்கள் தான் சிறந்த கலைஞர்கள், என்று கூறத் தடையில்லை யல்லவா?

கண்ணனை ஒரு **சுவை** யாகவே வைத்துக் கொண்டு பார்க்கலாம் என்றால் எப்படிப் பார்ப்பது? நம் கண்களுக்கு அவன் எப்படிப் புலப்படுவான்? சுவையோ கண்ணுக்குப் புலப்படாத பொருள். அதைச் சிலர் எட்டு என்கிறார்கள். ஒன்பது என்பாரும் உண்டு. பத்து என்று பேசியவர்களும் இல்லாமலில்லை. கண்ணனை இவைகளுள் எங்கே தேடுவது! ஆம், சிறிது கடினமான காரியம்தான். ஆனால் 'நமக்குக் காட்டிக் கொடுக்க மஹான்கள் இருக்கிறார்கள்!' என்பதை எண்ணும் பொழுது, இழந்த தைரியத்தைத் திரும்பவும் பெறத் துணிவு உண்டாகிறது.

சுவைகள் எத்தனை வகையாக வேண்டுமானாலும் இருக்கட்டும். 'சிருங்காரம்' யாவற்றிலும் தலை சிறந்தது என்பதில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது.

சக்தியும் சிவனுமாக உள்ள, சராசரங்கள் முழுவதிலும் வியாபித்து இருக்கும் இன்பப் பசையாக இந்த 'சிருங்காரத்தை'யே தான் கூற வேண்டும். '**ரஸ ராஜா**' என இது அழைக்கப் படுகிறது.

சிருங்கார ரஸத்தை அநுபவிப்பதற்கு வேண்டிய உணர்ச்சியின் பெருக்கத்தை- இடையறாத உணர்ச்சியை-'ரதி' என்று வழங்குகிறோம். இந்த ரதியே உலகத்தை இன்று வாழ வைக்கிறது என்றால் அது மிகையாகாது.

நாட்டிய சாஸ்திரத்தை எழுதிய பரத முனிவர், நடனங்களுள் முக்கியமான, 'நிருத்தியம்' என்னும் வகை, 'சிருங்கார ரஸ'த்திலிருந்து பிறந்தது எனக் கூறுகிறார். ஆன்மாவுடன் ஆன்மா கொண்டுள்ள தொடர்பைத் தொட்டுக் காட்டி ஆனந்த ஸாகரத்திலே ஆழ்த்தும் வல்லமை இந்த நடன வகைக்கே உரியதாகும் எனவும் கூறியுள்ளார் அவர்.

'ரஸ ரத்னாகரம்' எனும் அணி நூல் விஷ்ணுவையே சிருங்கார ரஸத்தின் தெய்வமெனக் குறிப்பிடுகின்றது.

ஆக, ஜீவனுக்கு உயிராக அமைவது **சுவை** என்றும், சுவைகளுள் 'நல்ல சுவை' சிருங்காரம் என்றும் - அதுவே கண்ணன் என்றும் ஒருவாறு தெளியலாம். சிருங்கார ரஸம், 'மாதுர்யம்' என்றும், 'உஜ்வலம்' என்றும் அநுபவிகளால் பல பெயர்களாலே பேசப்படுகிறது. உயர்ந்த-அழகிய-முறையில், கண்ணனை—கடவுளை-வழிபட இச்சுவையை அடிப்படையாகக் கொண்டு கோபிகைகள் மேற்கொண்ட முறையே 'சிறந்தது' என ஸ்ரீ சைதன்ய தேவர் தெளிவாகக் கூறியதோடு, தம் அநுபவத்தையும் தந்து போயிருக்கிறார்.

'பச்சை மாமலைபோல் மேனி
பவளவாய்க் கமலச்செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே' என்னும்
இச்சுவை தவிரயான் போய்
இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே.

என ஆழ்வார் இறைவனைச் சுவையாக விளக்கி யருளியதும் நமக்குப் பற்றுக் கோடாகுமல்லவா?

'பிரியம் புருஷார்த்தங்களுள் சிறந்தது' என முடிவு கட்டியவர் சைதன்ய தேவர்.

'சிருங்கார ரஸம் வடிவங் கொண்டு வனத்திலே ஹரியாக விளையாடுகிறது' என ஆதர்ச அன்பர்களான **ராதா மாதவர்களைப்** பாடிய ஜயதேவர் சுட்டிக் காண்பிக்கிறார்.

'அன்பு தருபவனும், விருப்பத்தை நிறைவேற்றுபவனும், வாழ்வும், உயிரும் கண்ணனே' என பில்வ மங்களஸ்வாமிகள் பேசியதும்,

'அன்பு தருவதிலே - உனை நேர்
ஆகுமோர் தெய்வம் உண்டோ,

என பாரதியார் பேசியதும் கண்ணனைக் காணும் இருகண்களுடைய ஒரு நோக்கும் ஒரு போக்குங் கொண்ட நிலைகளாகவே காணப்படுகின்றன.

இப்போழுது நாம் காண வேண்டியது என்னவெனில் சிருங்கார பாவங்களின் ஆணி வேராக, அழுத்தமான, பிணிக்கும் அன்புப் பசையாகக் கண்ணன் எவ்வாறு அமைந்துள்ளான்? அவன் வடிவமாம் சிருங்காரத்திற்கு அத்துணைச் சிறப்பு ஏன்? என இவைகளை அறியவேண்டும். கண்ணனைப் பிடித்துக் கொண்டால், இல்லை, கண்ணனைப் பிடித்துக் கொண்டவர்களைப் பிடித்துக் கொண்டால் தான் இதற்கு விடை தெரிய முடியும்.

• மற்றும் 'சிருங்காரம்' எனும் காதலுக்கு ஒரு இலக்கணமும் தெரிய வந்தால் நல மல்லவா? நாரதர் கூறும் இலக்கணத் தைக் கேட்கலாம் :—

'தனக் கெனத் தனிப் பண்பு ஒன்றைப் பெரு ததும், ஒன்றையும் பிரதியாக எதிர் பாராததும், கணந்தோறும் மிகுவதும், இடையறுததும், நுட்ப மாக அனுபவிக்கப் படுவதுமே பிரேமை'

என்கிறார் நாரதர்.

'கபட மில்லாத அன்பு எது? மனிதர் உலகில் அது கிடைக்குமோ? கிடைக்கு மானல் 'பிரிவு' உண்டா? பிரிவு ஏற்பட் டால் பிழைக்க முடியுமா?' என்று கேட் கிறார் கண்ணனுடைய காதலர் ஒருவர்.

பாரதியார் கூறியது தான் என்ன வென்று பார்க்கலாமே:—

'இன்பக் கொடுநெருப்பாய்
அனற் சுவை அமுதாய்
நன்றியல் காதல்'

என்று இப்படி யமைகிறது அவர் கண்ண னிடம் பெற்ற காதல். இதன் மூலம் 'காக் கைச் சிறகினிலே' அவனைக் 'காணும் இன் பத்தையும், 'தீயினுள் விரலை வைத்த போது அவனைத் தீண்டும் இன்பத் தையும்' பெறுகிறார் அவர்.

'பாரதியார் காதலாகப் பெற்றிருந்தது கண்ணனையே' என்பதைத் தன் காதலனை அவர் கூப்பிடும் பொழுது கேட்டால் விளங்கும். '**காதலடி நீ எனக்கு, காந்தமடி நானு னக்கு**' - கேட்கிறதா?

தன் வாழ்க்கையிலே அவர் பாடிய பல் லவி ஒன்றே ஒன்றுதான்.

''காதல் காதல் காதல் - காதல் போயின்
சாதல் சாதல் சாதல்.''

இவ்விதமாகப் புருஷோத்தமன் தன் னுடைய அன்பை ப்ரக்ருதி முழுவதற்கும் கொடுத்துத் தானே இன்பம் அடைகிறான். 'கண்ணன் ஒருவனே புருஷன், ஏனைய உயிர்கள் பெண்களே' என்று ஜீவகோஸ் வாமிக்குக் கூறுவது போல **மீரா** நமக்கே உபதேசிக்கிறார், என்பதையும் மறந்து விடக்கூடாது.

'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து
உற்று அறியும் ஐம்புலனும்
ஒண்தொடியாள் கட்னே உள'

எனும் வள்ளுவர் வார்த்தைக்கு ஏற்ப, தான் சராசரங்களையும் எவ்வகையாலும் அனுபவிக்க வேண்டும் என்று நினைத்த **கண்ணன் படைப்பையே பெண்ணாக அமைத்துக் கொண்டான் போலும்! உலகம் இதை உணர்ந்து கொள்ளாத பொழுது-கலாசாரம் அற்றுக் காணப்பட்ட பொழுது - ஆண்மை அழிய, அன்பனோடு கலக்கக் காதல் கொள்ளாதிருக்கும் பொழுது - கண்ணன் கவ லைப் படுவது இயற்கை யாகின்ற தல்லவா? அவன் பட்ட கவலையின் பயனே, கலையின் பயனாகவும் அமைந்து, பாகவதமாகவும் புறப்பட்டது.** மஹா பாகவதர்களின் அநுபவமாகவும் வெளி வந்தது. (எப்படி யென்று அடுத்த மணி யில் காணலாம்.) ●

எழுத்தாளர்களுக்கு

★

● இசை, சிற்பம், சித்திரம், பரதம் இவை பற்றிய, ஆதாரத்துடன் எழு தப்பட்ட, எளிய நடையில் அமைந்த கட்டுரை, சிறுகதை, சிறு நாடகம், கவிதை ஆகியவைகளுக்கு "நாட்டி யத்தில்" சிறந்த இடமுண்டு.

● போதிய தபால் தலைகளுடன் வந்த, வெளியிட இயலாத கட்டுரை முத லியன திருப்பி அனுப்பப்படும்.

● கலையின் தனிப்பகுதிகளை எடுத் துக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரை களுக்கு நல்ல வரவேற்புண்டு.

● ஏற்றுக் கொள்ளப்படும் விஷயதா னங்களுக்குத் தகுந்த சம்மானம், பிர சுரத்திற்கு ஒரு வாரம் முன்னதாகவே அனுப்பி வைக்கப்படும்.

● நாட்டியத்தின் சித்திரை வெளியீட் டிலிருந்து தொடர் கதை யொன்று வெளியாகும். கதை, கலைத் தொடர்பு உள்ளதாக இருக்கும்.

● ஒவ்வொரு மணியிலும் வெளியாகும் 'நாட்டியப் பயிற்சி'யும் 'ஸ்வரப்படுத்திய கீர்த்தனையும்' பிரதி (reprint) ஒவ்வொன் றுக்கு அணா 4 வீதம் அனுப்பு வோருக் குத் தபால் செலவின்றி அனுப்பி வைக்கப் படும்.

ஆசிரியர்,
'நாட்டியம்' சென்னை 6.

கேரள நடனம்

கோபிநாத்



7. கபித்தம் :—சுண்டு விரலும், மோதிர விரலும் உட்புறம் நன்கு மடிய, கட்டை விரலின் நுனி உட்புறமாக வளைந்து மோதிர விரலின் மேல் அழுந்த, ஏனைய விரல்கள் நிமிர்ந்து நேராக இருந்தால் 'கபித்தம்' எனும் ஹஸ்தமாகும்,

8. ஹம்ஸ பக்ஷம் :—எல்லா விரல்களும் சேர்ந்து நேராக நிமிர, கட்டை விரல் பிரிந்து நிற்க 'ஹம்ஸ பக்ஷம்' எனும் ஹஸ்தமாகும்.





9. சிகரம் :— மோதிர விரலும், சுண்டு விரலும் உட்புறம் நன்கு வளைய, உட்புறம் வளைந்த கட்டை விரலின் நுனி, வளைந்த மோதிர விரலின் மேலழுந்த, பின்புறம் தள்ளப் பட்ட ஆள் காட்டு விரலும் நடு விரலும் நிமிர்ந்து நேரெதிராக இருந்தால் 'சிகரம்' எனும் ஹஸ்தமாகும்.



10. ஹம்ஸாஸ்யம் :—முன்புறம் நீண்டு சேர்ந்து சாய்ந்த ஆள் காட்டு விரலும், நடு விரலும் கட்டை விரலின் மீது அமர, மோதிர விரல் நீண்டு முன்புறம் சிறிது சாய்ந்திருக்கச் சுண்டு விரல் நேராக நிமிர்ந்திருந்தால் 'ஹம்ஸாஸ்யம்' எனும் ஹஸ்தமாகும்.



11. அஞ்சலி :— எல்லா விரல்களும் ஒன்று சேர்ந்திருக்க, உள்ளங்கை குழிந்திருந்தால் 'அஞ்சலி' எனும் ஹஸ்தமாகும்.



12. ஸூசீ முகம் :— சுண்டு வில், மோதிர விரல், நடு விரல் ஆகிய இவைகள்உட்புறம் நன்கு மடிய, உட்புறமாக மடிந்த கட்டை விரல் நடு விரலின் மேலழுந்த, ஆள்காட்டு விரல், நிமிர்ந்திருந்தால் 'ஸூசீ முகம்' எனும் ஹஸ்தமாகும்.

13. ப்ரமரம் :—ஆள் காட்டு விரல் முன்புறம் நடுக் கணுவில் வளைய, விரல்கள் சேர்ந்து நிமிர்ந்திருக்க 'ப்ரமரம்' எனும் ஹஸ்தமாகும்.



14. அர்த்த சந்திரம் :—கட்டை விரலும், ஆள்காட்டு விரலும் நன்கு பிரிந்து நீண்டிருக்க ஏனைய விரல்கள் உட்புறமாக வளைந்திருந்தால் 'அர்த்தசந்திரம்' எனும் ஹஸ்தமாகும். ●

உங்களதிர்ஷ்டத்தில் எழுதி இருப்பதென்ன?

நீங்கள் ஒரு வருஷத்திற்குள் நடக்கும் சுபா சுபங்களை அறிந்து கொள்ள வேண்டுமெனில் இன்றே ஒரு கார்டில் உங்களுடைய விலாசம், ஒரு புஷ்பத்தின் பெயர் எழுதியனுப்புங்கள். நாங்கள் ஜோதிட சாஸ்திர கணிதப்படி தங்களுக்கு உண்டாகும் லாப நஷ்டங்கள், எந்த வியாபாரத்தால் லாபம் கிடைக்கும், எங்ஙனம் பொருள் சேரும், உத்தியோகம் எப்போது கிடைக்கும், வேலை ஆட்களுடைய அபிவிருத்தி, தம்பதிகளுடைய சௌக்கியம், ஆரோக்கியம், வியாதி, தூரப்பிரயாணங்கள், வியாஜ்ஜியம் அல்லது பரீட்சைகளில் தேர்ச்சி, கல்யாணம், பூமி அல்லது ஆஸ்பத்திரியினால் சுகம், புதிய நட்பு இவைபற்றி உங்கள் கார்டு சேர்ந்த உடனே மாதவாரி பலனும் வருட பலனும் ரூ. *1-4-0* தபாலில் V.Pயில் அனுப்புகிறோம். தபால் செலவு வேறு. துரதிர்ஷ்டத்தை அதிர்ஷ்டமாக்கிக் கொள்ளவும் வழியுண்டு. எழுதி அனுப்புகிறோம். இதனால் வப்போகும் கஷ்டங்களிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம். ஒருமுறை பரீக்ஷித்தாலே தெரியும். உங்கள் ஜாதக பலன்களில் திறமையைத் தப்பென்று ருஜூ செய்தால் கட்டிய பணம் வாபஸ் செய்யப்படும்.

பண்டிட் தேவ் தத் சாஸ்திரி ராஜ் ஜோதிஷர் (N. M. T.)
கர்த்தர்பூர் (E. P.)

Pt. Dev Dutt Shastri Raj Jyothishi, (N. M T.)
Kartarpur (E. P.)

20-3-49

NEHRU'S AGENCY
பெருங்காயம்
"COBRA" Brand

Telegram : LOVALL
Telephone : 84182

★

No. 10, 3rd Street,
Gopalapuram,
MADRAS-6

நல்ல முறையில் தயார் செய்து அழகிய சம்படங்களில் 2 பலம் பாக் செய்யப்பட்டிருக்கிறது. வழக்கப்படி கட்டியாய் இல்லாமல் சூர்ணமாய் செய்யப்பட்டிருக்கிறது.

அநேகர் இதை உபயோகித்துச் சந்தோஷமடைந்திருக்கிறார்கள். நற்சாட்சி பத்திரம் அநேகம் வந்திருக்கின்றன. நீங்களும் எங்கள் பெருங்காயத்தை உபயோகித்து, அதன் நல்ல மணத்தை அனுபவியுங்கள். ஒருதரம் வாங்கிப் பாருங்கள். விலை சரசம். எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு நல்ல கமிஷன். விவரங்களுக்கு மேல்கண்ட விலாசத்திற்கு எழுதவும். சாம்பிள் கேட்பவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும்.

20-3-49



"சாஸ்திரீய ஜோதிஷம்"

★

லக்ஷக் கணக்கான ஜனங்கள் எங்கள் உண்மையான பலனைக் கேட்டு மிக்க ஸந்தோஷமடைகிறார்கள்.

★

எதிர்கால கேள்வி 3க்கு	ரூ. 2	0	0
ஒரு ஜாதகம் கணிக்க	ரூ. 3	0	0
ஒரு வருஷ மாதவாரி பலன்	ரூ. 5	0	0
பொதுப் பலன் எழுத	ரூ. 10	0	0
புக்திவாரி ஆயுள்வரை எழுத	ரூ. 25	0	0

ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

ஜோதிஷ ரத்னம் பண்டிட் M. R. K. மூர்த்தி,
148, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், மதராஸ். 20-3-49

கந்தர்வ கானாலயம்

சிறுவர் சிறுமிகளுக்கு



வாய்ப்பாட்டு
வீணை
பிடில்
ஹிந்தி

ஆகியவைகளில் ஒன்றரை வருஷ காலமாகச் சிறந்த பயிற்சி அளித்து வருகிறது.

★

29, பிள்ளையார் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி.

புதிய வெளியீடுகள்

		ரூ.	அ.
1.	வழிகாட்டி கி. வா. ஜ.: திருமுருகாற்றுப்படை விளக்கம்	2	8
2.	அமர ஜோதி மஹாத்மா காந்தியின் அழகிய சரிதம்-ஸேனா	1	0
3.	கலைச் செல்வி சிறு கதைகள் கி. வா. ஜ.	2	0
4.	ராஜகுமாரி விபா நாவல் டாகூர் இயற்றிய தன் மொழி பெயர்ப்பு த. ந. குமாரசாமி, பி ஏ.	3	0
5.	கண்ணபிரான் திருவிளையாடல் நவீன முறையில் எழுதியது பி. ஸ்ரீ	1	0
6.	ஸர்தார் வல்லபாய் படேல் விரிவான சரித்திரம்	1	8
7.	கதைக் கோடி மலர்-II	2	0

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர். சென்னை - 4

Edited & Published by Mr. RANJAN B. A. M. Litt. Cathedral Post, Madras. 6. Asst, Editor "SIRAKI"
Printed by D. K. Swamy at the Rajan Electric Press, 7, Sunkurama Chetty Street, G. T. Madras-1